Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்


புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 26 இதழ் - 12 டிசம்பர் 2013

தனிப்பிரதி
ரூ.9/-



# புதிய வெளியீடு




மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டு
தேர்ந்த முறையில்
பைண்டிங் செய்யப்பட்ட
பாட்டுப் புத்தகம் வேண்டுவோர்
எங்களை தொடர்பு கொள்ளவும்.

**550 தமிழ்ப் பாடல்கள்**
**50 ஆங்கிலப் பாடல்கள்**
**40 தமிழ், ஆங்கில**
**குறும்பாடல்கள்**

**திருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும்**
**அடியேன் குடும்பத்தின் சார்பாக**
**புத்தாண்டு வாழ்த்துக்கள்.**
உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் எல்லாவற்றிலும்
வாழ்ந்து சுகமாய் இருக்க வேண்டுகிறேன்.

## ஆசானின் அறிவுரையிலே ...


1. ஆசிரியர் உரை 1
2. ஏன் நாங்கள் தேவனை... 9
3. பெண்கள் பகுதி 14
4. வாலிபர் பகுதி 17
5. சிறுவர் பகுதி 20
6. நிழலும் நிஜமும் 22
7. ஐக்கியம் சம்மந்தமாக... 26
8. ஆராதனை என்பது ... 27
9. ஞானஸ்நானம் எதற்காக? 28
10. வசன ரீதியான சபை 30


★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/ அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 26 DECEMBER - 2013 Issue - 12**


ஆசிரியர் உரை

# இயேசுவின் பிறப்பை ஒட்டிய நாட்கள்

**வா**னத்தின் கீழெங்குமுள்ள கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலும் வாழும் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மிகப்பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயத்திற்கு ஆங்கில நாட்காட்டியின் இறுதி மாதமாகிய டிசம்பர் மாதம் சிறப்புக்குரிய ஒரு மாதம். ஆம், கடந்த வருடங்களின் கொண்டாட்டத்தைப் பார்க்கிலும் இந்த வருடம் வெகு விமரிசையாகவும், பிரம்மாண்டமாகவும் இருக்க வேண்டுமென்று எண்ணி, கொண்டாட்டக் காரியங்கள் போட்டா போட்டியுடனும், மலைக்க வைக்கும் பொருட்செலவுகளுடனும் நடத்தப் படும். ஆட்டத்திற்கும், ஆர்ப்பாட்டத்திற்கும், வேடிக்கைகளுக்கும், கேளிக்கை களுக்கும் கொஞ்சமும் குறைவிருக்காது. இடையிடையே பக்திக்குண்டான காரியங்களும் அப்படியே போக்கும்வரத்துமாயிருக்கும். ஏன் இப்படி யெல்லாம் என்று கேட்டுவிட்டால் போதும், தப்பிப்பது வெகு பாடாகிவிடும். இதுதான் இன்றைய கிறிஸ்தவத்தின் யதார்த்த நிலை.

மேலே, " பல பிரிவுகளைச் சார்ந்த மிகப்பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் " என்று குறிப்பிட்டிருப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்களென்று நான் நம்புகிறேன். " மிகப்பெரும்பாலான " என்ற வார்த்தைக்கும் " எல்லாரும் " என்ற வார்த்தைக்கும் உள்ள வேறுபாடு ஆசானின் வாசகர்களாகிய உங்களுக்கு விளங்காமலிருக்காது. மிகப்பெரும்பாலான என்று சொல்லும்போது, "எல்லாரும்" அதில் வராமல், கொஞ்சம் பேர் விலகி நிற்கிறார்கள் என்றே பொருள்படும். அப்படியானால், இவர்கள் யார்? இவர்கள் தங்களை எவ்வித மதப் பெயர்களாலும், மார்க்கப்பிரிவுகளாலும் அழைத்துக் கொள்ள விரும்பாமல், வெறுமனே " கிறிஸ்தவர்கள் " என்று மாத்திரம் (அப். 11:26) சொல்லிக் கொள்ளத் தீர்மானித்திருப்பவர்கள். எண்ணிக்கையில் சொற்பமாக

இருந்தாலும், இவர்கள் ஒரு நகரத்திற்கோ, ஒரு பகுதிக்கோ, ஒரு மாநிலத்திற்கோ, ஒரு தேசத்திற்கோ, ஒரு கண்டத்திற்கோ உரியவர்களாக இல்லாமல், உலகெங்கிலும் பரவியிருப்பவர்கள். " மறைவானவைகள் கர்த்தருக்கே உரியவைகள் " (உப. 29:29) என்ற வேத வசனத்தில் அபார நம்பிக்கை கொண்டு, வெளிப்படுத்தப்படாதவைகளுக்காக விலகியிருந்து, வெளிப்படுத்தப்பட்டவைகளுக்காக வைராக்கியமாய் வாழும் கர்த்தருடைய சபை அங்கத்தினர்கள்.

இவர்களை எஸ்தர் ராணி காலத்து யூதர்களோடு நாம் ஒருவகையில் ஒப்பிடலாம். பேரரசன் அகாஸ்வேருவின் ஆளுகையின் கீழ் இந்தியா உட்பட 127 நாடுகள் இருந்தன. இந்த தேசங்களிலெல்லாம் யூதர்கள் பரவியிருந்தனர் (எஸ். 3:8). அக்காலத்தில், ஓர் அரசியல் விபத்தின் காரணமாகத் தகுதியும், தரமும், உண்மையும், நியாயமுமற்ற ஆமான் என்பவன் ராஜாவின் அடுத்த நிலைக்கு உயர்த்தப்பட்டான் (எஸ்தர் 3:1). அனைவரும் அவனை வணங்க வேண்டுமென்று அரச கட்டளை இருந்ததால் எல்லாரும் வணங்கி நமஸ்கரித்தனர் (3:2). அவர்களில் விதிவிலக்காக இருந்த ஒற்றை மனிதன் மொர்தெகாய் என்னும் யூதன் (3:2). அப்படி அவன் வணங்க மறுத்ததற்கான காரணம் அரச எதிர்ப்போ, அதிகார மறுப்போ, அரமனை துரோகமோ அல்ல. காரணம் வெளிப்படையானது. " நான் யூதன் ", அவ்வளவு தான்.

தேவ பயமும், தேவனுடைய வார்த்தைகளின் மீதான பக்தியும் தான் அவனை அந்த முடிவெடுக்க வைத்தது. அவன் வாழ்ந்த காலத்துக்கு சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்பாகப் பரலோகத்தின் தேவனால், தேவ மனிதனாகிய மோசேயைக் கொண்டு கொடுக்கப்பட்ட " என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்..... நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறேன்... " (யாத். 20:3,5) என்னும் தேவ வார்த்தைகள் அவன் ஆழ்மனதில் அப்படியே பதிந்திருந்தது. ஆகவே, அகாஸ்வேருவின் கட்டளை இவனை ஏன் என்று கூடக் கேட்கவில்லை.

வைரம் பாய்ந்த விசுவாசம் கொண்ட இந்த யூதனைச் சீண்டிப் பார்க்க எண்ணி, ஆழம் தெரியாமல் காலை விட்டான் புதிதாக வாழ்வு பெற்ற ஆமான். அதிகார மயக்கம் அவன் கண்களை மறைத்தபடியால், ஒற்றை யூதனாகிய இந்த மொர்தெகாயின் மீது மாத்திரம் கைபோடுவது அற்பமான காரியம் என்று கண்டு, ஒட்டுமொத்த யூத இனத்தையே அழிக்கத் தீர்மானித்து, அகாஸ்வேரு ராஜாவிடம் இப்படியாகப் புகார் செய்தான். " உம்முடைய ராஜ்ஜியத்தின் சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒருவித ஜனங்கள் *சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது....* " என்று (3:8). அதிகாரத்தின் உச்சியிலிருந்த அவனுக்கு இப்படிப் பரவிக் கிடக்கும் ஜனங்கள் யார் என்று கூடச் சொல்லத் தெரியாமல், "ஒரு வித ஜனங்கள் " என்றும், என்ன செய்கிறார்கள் என்பதை விளக்க முடியாமல், " விகற்பமான பழக்கமுடையவர்கள் " என்றும் கூறுகிறான். இவனுக்கெல்லாம் பதவி!

அன்பானவர்களே, டிசம்பர் மாதம் வரும்போதெல்லாம் எனக்கு இந்த வசனம் தான் நினைவுக்கு வரும். அகாஸ்வேரு ராஜாவின் நாட்களில் 127 நாடுகளில் பரவியிருந்த யூதர்களைப் போல், இன்றைய உலகில் உள்ள

200க்கும் மேலான நாடுகளில் இந்த " ஒருவித ஜனம் ", " விகற்பமான பழக்க வழக்கங்களுடன் " பரவியிருக்கிறார்கள். இவர்கள் மிகப்பெரும்பான்மை யான கிறிஸ்தவ சமுதாயத்தோடு தங்களை எவ்விதத்திலும் இணைத்துக் கொள்ளாமல், வெளிப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் உறுதிகாட்டி, " ஒருவித ஜனமாக, விகற்பமான பழக்க வழக்கங் களுடன் " தேவனை ஆராதித்து வருகிறார்கள். மொர்தெகாயின் நாட்களில் அற்பமாக எண்ணப்பட்ட அந்த ஒருவித ஜனங்களோடு பரலோகத்தின் தேவன் இருந்து வழி நடத்தினது போல் இவர்களோடும் இருந்து வழி நடத்துகிறார் (மத். 28:20).

என்ன இது, ஆசானின் உரை வண்டி இம்மாதம் தடம் புரண்டு விட்டது போல் தெரிகிறதே என்று எண்ணுகிறீர்களா? அப்படியெல்லாம் எண்ணா தீர்கள். நம்ம வண்டி தடமும் புரளாது. விபத்தும் நடக்காது. தைரியமாகத் தொடர்ந்து பயணிக்கலாம்.

சரி, இயேசுவின் பிறப்பை இவ்வளவு அமர்க்களமாகக் கொண்டா டும் அநேகரிடம் இயேசுவின் பிறப்பை ஒட்டிய நாட்கள் பற்றி ஏதாகிலும் கேட்டால், பெரும்பாலும் யாருக்கும் எதுவும் தெரிவதில்லை. இயேசுவின் பிறப்புக்குப் பிறகு என்ன நடந்தது, ஏதாவது சொல்லுங்கள் பார்க்கலாம் என்றால், " இடைநில்லாப் பேருந்து " போல, பிறப்பை விட்டால், அடுத்துப் பெரிய வெள்ளி, ஈஸ்டர் என்று கூறுகிறார்கள். விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருக்குத்தான் இயேசு 12 வயதில் எருசலேமுக்குப் போனார் என்பது தெரிந்திருக்கிறது. கிறிஸ்தவத்தில் காணப்படும் இந்தக் கீழான வேத அறிவு பண்டிகைகள் தந்த பரிசென்றால் அது மிகையாகாது என்றல்லவா தெரிகிறது. இயேசுவின் வாழ்வில் நடந்ததாக வேதாகமம் வெளிப்படுத்தும் எல்லா வற்றையும் தெரிந்து கொள்ளாமல், இயேசுவின் உபதேசத்தையும், அந்த உபதேசங்களின் ஆழத்தையும் புரிந்து கொள்ளாமல் எப்படி ஒருவன் தன்னை இயேசுவின் சீடன் என்று சொல்லிக் கொள்ள முடியும்? மொர்தெகாய்க்கு மோசே யின் பிரமாணங்களைப் பற்றிய அறிவும், தெளிவும் இருந்தபடியால் தான் தேவனுடைய வார்த்தைகளுக்காக நிற்க முடிந்ததென்பதை மறந்து விடாதீர்கள்.

இயேசுவின் பிறப்பை ஒட்டிய நாட்கள் பற்றிய கொஞ்சம் தகவல்களை நமக்கு மத்தேயு ஆசிரியர் மாத்திரமே கொடுக்கிறார் (மத். 2:13,23). பிறப்புக் குப் பிறகு, இயேசு எகிப்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் திரும்ப அழைத்து வருவதை ஏனைய நற்செய்தி ஆசிரியர்கள் ஏனோ நமக்குத் தருவதில்லை. அவர்கள் தரவில்லை என்பதை விட, பரிசுத்த ஆவியானவர் ஏனோ வெளிப் படுத்தவில்லை என்பது தான் சரியாக இருக்கும். இயேசுவின் ஊழியம் மற்றும் பாடு, மரணம் சம்பந் தப்பட்ட காரியங்களை நான்கு நற்செய்தியாளர் களுக்கும் வெளிப்படுத்தின ஆவியானவர், பிறப்பு மற்றும் பிறப்பை ஒட்டிய சம்பவங்களை எல்லா நற்செய்தியாளர்களுக்கும் ஏன் வெளிப்படுத்தவில்லை என்பது குறித்து எப்போதாவது சிந்தித்திருக்கிறோமா? எது முக்கியம், எது முக்கியமல்ல என்பது தேவனுக்கும், அவருடைய ஆவியானவருக்கும் தெரிந் திருக்கிறதைக் காட்டிலும் இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்திற்கு அதிகம் தெரிந்து விட்டதா? நீங்களே நிதானித்துப் பாருங்கள். தேவ ஞானத்தைச் சிறுமைப்படுத்துவது நல்லதல்ல! எச்சரிக்கையாயிருப்போம்.

சரி, இயேசுவின் பிறப்பை ஒட்டி நடந்த சம்பவமாக மத்தேயு ஆசிரியர் என்ன சொல்லுகிறார் என்பதை இங்கே கவனிப்போம்.

குழந்தையாகிய இயேசுவைத் தாழ விழுந்து பணிந்து காணிக்கை செலுத்தின பிறகு (மத். 2:11) ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போக வேண்டாமென்ற தேவ எச்சரிப்புக்குப் புறவினத்தாராகிய சாஸ்திரிகள் முழுமையாகக் கீழ்ப்படிந்து வேறுவழியாய்த் திரும்பிப் போனார்கள். அவர்கள் போன பின்பு கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு, ஏரோது பிள்ளையைக் கொலை செய்யத் தேடுவான். ஆதலால், நீ எழுந்து, பிள்ளையையும், அதின் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்கு ஓடிப் போய், நான் உனக்குச் சொல்லும் வரைக்கும் அங்கே இரு என்றான் (மத். 2:13). இந்த தேவ கட்டளையை நிறைவேற்ற விடியும் வரை கூடக் காத்திராமல், உடனே யோசேப்பு எழுந்து, இரவிலே பிள்ளையையும், அதின் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குப் புறப்பட்டுப் போனான் என்று பார்க்கிறோம். எனதருமை கிறிஸ்தவ சமுதாயமே, யோசேப்பின் இந்தக் கீழ்ப்படிதலை என்னவென்று சொல்லுவது? எப்படி விவரிப்பது? விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம் தேவ கட்டளையை நிறைவேற்ற அதிகாலமே " ஏழுந்து புறப்பட்டான் என்பது நாமறிந்ததே. (ஆதி. 22:3) ஆனால், இந்த யோசேப்போ "இரவிலேயே " புறப்பட்டுவிட்டார். அதுவும், பிறந்த சில நாட்களே ஆன குழந்தையையும், பச்சை உடலோடு இருந்த தாயையும் கூட்டிக் கொண்டு!! இது எவ்வளவு கடினம் என்பதை நான் உங்களுக்கு விளக்க வேண்டிய அவசியமில்லை.

அந்நாட்களில், தேவ தூதன் போகச் சொன்ன எகிப்து தேசம் ரோம ஆளுகைக்கு உட்பட்ட, அதே வேளையில், எரோதின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட பகுதி. பெத்லகேமிலிருந்து தென்கிழக்காக சுமார் 150 கி.மீ தொலைவில் இருந்தது. ஆதி காலந்தொட்டு எகிப்து அடைக்கலம் தரும் ஒரு பகுதியாக இருந்துள்ளதாகவே தெரிகிறது (1 ராஜா 11:40; எரே. 43:7). எகிப்தின் எந்த இடத்திற்கு இவர்கள் சென்றார்கள் என்று நமக்குச் சொல்லப்படவில்லை. இது கெய்ரோ நகரத்திற்குச் சில மைல் தொலைவில் இருந்த " மாட்டரீ " என்னும் ஊர் என்று நம்பப்படுகிறது. இங்கே நாம் கவனிக்க வேண்டிய ஓர் உண்மை உள்ளது. சாஸ்திரிகள் பெத்லகேமுக்கு வந்தது, பணிந்தது, திரும்பி வேறு வழியாய்ப் போனது, யோசேப்பு குடும்பத்தோடு ஊரைக் காலி செய்தது என்று எதுவும் பெத்லகேம் வாசிகளுக்குத் தெரிந்ததாகத் தெரியவில்லை. எப்படியெனில், ஏரோதுவினால் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை. தேவ வழிநடத்துதல்படி எல்லாம் வெகு கிரமமாக நடந்தேறியுள்ளது. இதன் மூலம், " எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டதும் " (ஓசியா 11:1) நிறைவேறியது.

ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதை அறிந்து, மிகுந்த கோபமடைந்து, பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண் பிள்ளைகளையும் கொலை செய்தான் (மத். 2:16). பல நேரங்களில் நாம் நம்மை தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுப்பது பிறருக்கு எரிச்சலையும், கோபத்தையும் உண்டு பண்ணும். அதற்காக நாம்

தேவ சித்தத்தை மீறவா முடியும்? அது ராஜாவாக இருந்தாலென்ன, மந்திரியாக இருந்தாலென்ன! தேவச் சித்தத்தின்படி செய்வதற்கு யோசேப்பு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. ஏரோதுவின் கொலை ஆணை மூலமாக, "ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் " (எரே. 31:15) என்ற தீர்க்க தரிசனமும் நிறைவேறியது.

" ஏரோது இறந்த பின்பு, கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டு; நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; பிள்ளையின் பிராணனை வாங்கத் தேடினவர்கள் இறந்து போனார்கள் என்றான் " (மத். 2:19,20). " இஸ்ரவேல் தேசத்துக்குப் போ " என்று தூதன் மூலமாகச் சொல்லப்பட்டதற்கு யோசேப்பு அப்படியே கீழ்ப்படிந்தார். "அவன் எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான் " (மத். 2:21) என்று வேத வசனம் கூறுகிறது. நூற்றுக் கதிபதி சொன்னது போல், இந்த யோசேயப்பு " போ " என்றால் போகிறான், " வா " என்றால் வருகிறான். படும் பாட்டைப் பாருங்கள்! தான் எந்தத் தவறும் செய்யாத நிலையில் இந்த யோசேப்பு ! நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? கீழ்ப்படிதலுக்கான சரியான இலக்கணமாக நாம் யோசேப்பின் வாழ்க்கையைக் கண்ணை மூடிக்கொண்டு காட்டலாம். இப்படியாக இஸ்ரவேல் தேசத்துக்குத் திரும்பி வந்து, நாசரேத்தூரில் வாசம் பண்ணியதன் மூலம் இன்னொரு தீர்க்கதரிசனமும் நிறைவேறியது (யோவான் 1:45).

சரி, இப்பொழுது இயேசு ஆண்டவரின் பிறப்பை ஒட்டிய இந்தச் சம்பவமானது நமக்குத் தரக்கூடிய இரண்டு பாடங்கள் பற்றிப் பார்ப்போம்.

## I. உலகமானது எப்பொழுதும் தேவனுக்கு எதிரானதாகவே இருக்கும்

இயேசுவின் பிறப்பை ஒட்டிய நாட்கள் சம்பந்தமான சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், இந்த உலகமும், உலகத்தை ஆளுகிறவர்களும் தேவனுக்கு எதிராக இருந்து, தேவ திட்டங்களுக்கு மாறாகவே எப்பொழுதும் செயல்படுவார்கள் என்பது.

ஆவியும், மாம்சமும் ஒன்றுக்கொன்று எதிரானதென்பது வெளிப்படையான உண்மை (ரோமர் 8:7; கலா. 5:17). இரண்டுக்குமிடையிலான இந்தப் போர் ஏதேன் தோட்டத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. உலகமுள்ளளவும் இது நீடிக்கும். தோற்றுப்போகும் பேராட்டாம் என்று தெரிந்தும், உலகத்தைச் சிநேகிப்பவர்களுடன் இணைந்து சாத்தான் இந்தப் போரை நடத்திக் கொண்டுள்ளான்.

இயேசுவின் பிறப்பை ஒட்டிய சம்பவமும் இதற்கு விதிவிலக்காக இல்லை. இயேசு பிறப்பார் என்பதும், அவர் பிசாசை காலின் கீழ் போட்டு மதிப்பார் என்பதும் ஆதி. 13:15ம் வசனத்திலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. " உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவன் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்றார். ஒருவேளை, இந்த தீர்க்கதரிசனம் இலைமறைவு காயாக இயேசுவைப்

பற்றிச் சொல்லப்பட்டதாகத் தெரிந்தாலும் இயேசு பிறப்பதற்கு சுமார் 700 ஆண்டு களுக்கு முன்பாக, பழைய ஏற்பாட்டுப் புவுல் என்றழைக்கப்படும் ஏசாயா தீர்க்கன், " நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப் பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர்; ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு என்னப்படும் " என்று சுலபமாகப் புரியும்படி முன்னறி வித்துள்ளாரே (ஏசா. 9:6).

இப்படி மேசியாவாகிய இயேசுவின் வருகை முன்னறிவிக்கப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும் உலக ராஜாக்களாலும், ராஜ்ஜி யங்களாலும் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இயேசுவின் பிறப்பு பற்றி செய்தியும், இயேசுவின் பிறப்பும் ஏரோதுவுக்கு எரிச்சலைத் தந்தது (மத். 2:1,3,16). ஏரோதின் வழிவந்த ஏரோது அந்திப்பா என்பவன், இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவானைச் சிறையில் தள்ளினதுமல்லாமல், அவன் தலையைக் கொய்து வரும்படி ஆணையும் இட்டான் (மத். 14:9,10). இயேசுவும், இயேசு சம்பந்தப்பட்டவைகளும் உலகத்தாலே இப்படித்தான் பார்க்கப் பட்டுள்ளது.

புறவினத்தார் தான் இப்படி என்றால், யூத மதத்தலைவர்கள் அதற்கு மேல். அவர்களே பரவாயில்லை என்று நினைக்கும்படியாக நடந்து கொண் டார்கள். ஆவியின் சிந்தை இல்லாமல் போகுமானால், அவர்கள் புறவினத் தாராக இருந்தாலும், யூதராக இருந்தாலும் செயல்பாடு ஒரே விதமாகவே இருக்கும். ஆம், யூத மதத்தலைவர்களும் இயேசுவைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியுள்ளார்கள் (மத். 26:2,4). அதில் தோற்றுப் போன போது, இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பொய்யாக்கும்படி கை நிறையப் பணத்தா லும், கறைநிறைந்த மனத்தாலும் முயற்சித்தார்கள் (மத். 28:11,15). இதிலும் தோல்வி தான். இப்படி இயேசுவின் பிறப்பின் போதும், உயிர்ப்பின் போதும் மண்ணைக் கவ்விய உலகம், இயேசுவின் அப்போஸ்தலர்களிடம் தங்கள் கைவரிசையைக் காட்ட முயன்றது (அப். 4:18,20; 5:40,42). உயிர்த்தெழுதலுக்கு முன்னான அப்போஸ்தலர்கள் வேறு, உயிர்த்தெழுதலுக்குப் பின்னான அப்போஸ்தலர்கள் வேறு என்கிற உண்மை, பாவம் அக்கயவர்களுக்குப் புரியாமல் இன்னும் ஒரு முயற்சியை எடுத்துத் தலைகுப்புற விழுந்தனர்.

அருமையானவர்களே, இயேசுவின் காரியமாக உலகத்தின் நிலை இப்படியாக இருந்தாலும் நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. இப்படித்தான் இருக்கும் என்று இயேசு முன்னறிவித்துள்ளார். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினா லும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது " (யோவான் 15:18,19). உலகத்தின் அதிபதியாகிய பிசாசு (யோவான் 16:11) எப்பொழுதும் கிறிஸ்தவர்களுக்கு எதிராளியாகவே இருக்கிறான் (1 பேதுரு 5:8).

ஆகவே, தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும், கிறிஸ்துவுக்கும் அவருடைய உபதேசத்துக்கும் உண்மையாயிருக்க விரும்புபவர்கள், உலகத்தைப் பற்றியும், அது கொடுக்கும் எதிர்ப்பு பற்றியும் துளியும் கலங்கக் கூடாது. அதிகாரத்தைக் கண்டும், கள்ள உபதேசங்களுக்கான வெகுஜன ஆதரவைக் கண்டும் துவண்டு விடக்கூடாது. மொர்தெகாய் போல தேவனுடைய வார்த்தைகளுக்காகத் துணிந்து வாழவேண்டும். அப்பொழுது மொர்தெகாயைக் காத்து வழி நடத்தின தேவன் நம்மையும் காத்து நடத்துவார்.

## II. எளிமையான துவக்கம் தேவ காரியங்களுக்குத் தடையாயிருக்க முடியாது

இயேசுவின் பிறப்பை ஒட்டிய நாட்கள் சம்பந்தமான சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், அற்பமான துவக்கத்தைக்கூட தேவனால் மகத்தானதாக மாற்ற முடியும் என்பது.

பொதுவாகவே ஒரு காரியத்தின் ஆரம்பத்தைக் கவனிப்பதைக் காட்டிலும் முடிவைக் கவனிப்பது அவசியம். இது குறித்து ஞானி சாலமோனைக் கொண்டு ஆவியானவர் " ஒரு காரியத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதின் முடிவு நல்லது " என்று கூறியுள்ளார் (பிர. 7:8). ஆரம்பத்தை வைத்து நாம் முடிவை முடிவு செய்து விட முடியாது. இயேசு ஆண்டவரின் மானிடப் பிறப்பு இதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

இயேசுவின் பிறப்பு எளிமையானதென்பது உலகறிந்த ஓர் உண்மை. ஓர் ஏழைத் தச்சனுடைய குடும்பத்தில் மகனாகப் பிறந்தார். (தச்சனுக்கு அல்ல) அவர் பிறந்த இடம் எளிமையானது. " அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள் " என்று பார்க்கிறோம் (லூக். 2:7). பிறந்ததற்குப் பிறகு உயிர்பிழைக்க எகிப்துக்கு இரவோடு இரவாகப் பயணம். பெயர் சொல்லப்படாத ஓரிடத்தில் ஆரம்ப நாட்கள். அடுத்து, எந்த நன்மையும் வராது என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாசரேத்தில் வளர்ப்பு (யோவான் 1:46). ஆனாலும், இயேசு இரட்சகர், உலக சரித்திரத்தின் நடுநாயகமாக இருந்து, சகல அதிகாரமும் பெற்று (மத். 28:15) வெற்றி வேந்தராய் பிதாவினுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் (அப். 2:38).

பரலோகத்தின் தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியான இந்த உயர்வுக்கான இரகசியம் என்ன என்பதை பவுலடியார் பிலிப்பியருக்கு எழுதும்போது இவ்விதம் விளக்கியுள்ளார். " அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷர் சாயலானரர். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்...." என்று (பிலி. 2:6-9). புரிகிறதா இரகசியம்? புரிந்தவர்களுக்கு நல்லது.

அருமையானவர்களே, பல நேரங்களில் நாம் நம்முடைய சரீர வாழ்க்கையின் நிலையை எண்ணி நம்மை நாமே நொந்து கொள்ளுகிறோம்.

நாமெல்லாம் அவ்வளவுதான், நமக்கெல்லாம் இனி என்ன இருக்கிறது, என்ன செய்து என்ன பயன் என்று இப்படித் தாறுமாறாக எண்ணுகிறோம். இது நம்மையும் அறியாமல் நம் தேவனை அவமானப்படுத்தும் ஒரு சிந்தை. நாம் ஒருபோதும் அப்படி நினைக்கத் தேவையில்லை. நம்முடைய ஆரம்பம் எப்படியாக இருந்தாலும் முடிவை சம்பூரணமாக மாற்ற தேவனாலே முடியும். ஏனென்றால், அவர் தேவன், அவ்வளவுதான். அதற்கு மேல் எதுவும் பேசத் தேவையில்லை.

தேவச்சித்தம் நிறைவேற்ற பூமிக்கு அனுப்பப்பட்ட இயேசுவானவர் எப்பொழுதாவது தனது பூமிக்குண்டான வாழ்வை நினைத்துக் குறைபட்டுக் கொண்டார் என்று வேதத்தில் எங்காவது வாசிக்கிறோமா? உண்மையில், அநேகராகிய நம் சரீர வாழ்வைக் காட்டிலும் அவருடைய பூமிக்குண்டான வாழ்வு சவால் நிறைந்ததாகவே இருந்துள்ளது. ஆனாலும், தேவன் அவரோடே கூட இருந்து, சகல காரியங்களும் தமது தயவுள்ள சித்தத்தின்படியாக நடக்க அனுமதித்து உன்னதங்களில் அவரை உயர்த்தினார். அந்த இயேசுவின் தேவனைத்தான் நாமும் தேவனாகப் பெற்றிருக்கிறோம். மறந்து விடாதீர்கள்!


ஆகவே, அன்பானவர்களே, எதிர்வரும் புதிய ஆண்டு நமக்கு நம்பிக்கையின் ஆண்டாக இருக்கட்டும். தேவனுடைய இருதயத்திற்கு ஏற்ற தாசன் தாவீது போல, " உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன் " (சங். 18:29) என்றும், அப்போஸ் தலன் பவுலடியார் போல, " என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு " (பிலி. 4:13) என்றும் சொல்லி செயல்படத்தக்கவர்களாக நாம் மாறுவோம்.

அதற்குத் தேவை இயேசுவின் சிந்தையும் (பிலி. 2:5). இயேசுவின் கீழ்ப்படிதலும் (பிலி. 2:8). குழந்தையாகிய இயேசுவைத் தன் குடும்பத்திலே ஏற்றுக்கொள்வதற்கு முன்பும், ஏற்றுக்கொண்டதற்குப் பிறகும் இச்சிந்தை யோசேப்பிடம் காணப்பட்டது. மனித வரலாற்றில் எத்தனையோ தச்சர்கள் பிறந்து மரித்திருக்கிறார்கள். ஆனாலும், யோசேப்பு என்னும் தச்சனைத் தானே உலகம் முழுவதும் இன்றளவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். காரணம் என்ன? தேவனுக்கடுத்த சிந்தையும், தேவ வார்த்தைகளுக்கான முழுமையான கீழ்ப்படிதலும் தான். இதே விதமான சிந்தையும், கீழ்ப்படிதலும் தான் மொர்தெகாய் என்னும் மனிதனுக்குள்ளாக அந்நாட்களில் இருந்துள்ளது. இவன் அரமனை வாசலில் கிடந்தவன் தான். தேவன் இவனைக் கைவிட்டாரா என்ன? ஆகவே, ஆரம்பம் பற்றி கவலைப்பட்டுக் காலத்தை வீணாக்க வேண்டாம்.

தேவனுக்கும், அவருடைய வார்த்தைகளுக்கும், கிறிஸ்துவுக்கும் அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கும் எந்தச் சூழ்நிலையிலும் நான் கீழ்ப்படிவேன் என்று தீர்மானித்துச் செயல்படுவோமானால், மற்றவைகள் அவருடைய சமூகத்தில் பார்த்துக் கொள்ளப்படும்.

எதிர்வரும் புதிய ஆண்டில் சர்வ வல்ல தேவன் உங்களோடிருந்து உங்களை ஆசீர்வதித்துக் காத்து வழி நடத்துவாராக! ஆமென்!! ❋

# ஏன் நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம்?



**Bro. J.C. சோட்**

நாம் வாழும் இன்றைய உலகம் முரண்பட்ட ஒன்றாயிருக்கிறது. ஒரு பக்கத்தில் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை நம்பாத மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் தேவன் என்று ஒருவர் இருக்கிறார் என்பதை மறுக்கிறார்கள். இந்த உலகமானது ஒரு விபத்தினால் அல்லது தற்செயலாக உருவானது என்றும், மனிதன் கீழான ஜந்துக்களின் சந்ததி என்றும் சொல்கிறார்கள். இவர்கள் மனிதனை விட மேலான ஒருவருக்கு தாங்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று விசுவாசிப்பதில்லை. இன்னொரு பக்கத்தில், ஒன்று அல்லது ஒன்றுக்கும் அதிகமான கடவுள்கள் இருக்கிறார்கள் என்பதை நம்புகிற மக்கள் பலர் இந்த உலகில் இன்றும் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் சொரூபங்களும், விக்கிரகங்களும் தங்கள் தெய்வங்களுக்கு பிரதிநிதி களாக இருக்கின்றன என்று நம்புகிறார்கள். இந்தக் காரியங்களில் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? நீங்கள் எதை நம்புகிறீர்கள்?.

நான் ஒரு கிறிஸ்தவனும், கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினருமா யிருக்கிறேன். ஆகையால், என் சகோதரரும், நானும் தேவனை விசுவாசிக் கிறோம். நாங்கள் ஒன்றான மெய்த் தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக் கிறோம், அவர் ஜீவனுள்ள தேவன், சர்வசிருஷ்டிகர், சர்வ வல்லவர், சர்வ ஞானி எல்லாவற்றையும் காண்கிறவர் என்றும் விசுவாசிக்கிறோம். மேலும், அவர் நித்தியமானவர், ஆவியாயிருக்கிறவர், சர்வ வியாபி என்றும் விசுவா சிக்கிறோம். நீங்களும் தேவனிடத்தில் இப்படியாக விசுவாசம் வைக்க நாங்கள் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறோம்.

நாங்கள் ஏன் தேவனை விசுவாசிக்கிறோம் என்று நீங்கள் ஆச்சரியப் படலாம். எங்கள் விசுவாசத்தைக் குறித்து கேள்வி கேட்க உங்களுக்கு எல்லா உரிமையும் உண்டு. ஆகையால், நாங்கள் தேவனை ஏன் விசுவாசிக் கிறோம் என்பதற்கான சில காரணங்களை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறோம்.

முதலாவது, தேவன் இருக்கிறார், அவர் எல்லாவற்றையும் உண்டாக் கினார் என்பதை நம்புவதற்குத் தர்க்க ரீதியாக எல்லாம் சரியாக இருக்கிற படியால் நாங்கள் தேவனை நம்புகிறோம். எல்லா ஜீவராசிகளோடும் இப்பூமி இருக்கிறது என்கிற உண்மையானது, இதற்கு யாரோ ஒருவர் பொறுப்பு என்பதை நிச்சயமாகக் காட்டுகிறது. ஒரு புத்தகத்திற்கு

எப்படி ஒரு ஆசிரியர் இருக்கிறாரோ, ஒரு வீட்டிற்கு எப்படி அதைக் கட்டினவர் ஒருவர் இருக்கிறாரோ, ஒரு வாகனத்திற்கு எப்படி அதை உருவாக்கினவர் ஒருவர் இருக்கிறாரோ அப்படியேதான் பூமியையும், அதில் குடியிருப்பவர்களையும், உண்டாக்கினவர் ஒருவர் இருக்கிறார். வேதாகமத்தின் முதல் வார்த்தைகளில் நாம் இப்படியாக வாசிக்கிறோம், *"ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்"* (ஆதி. 1:1) என்று.

இரண்டாவது, சர்வ சிருஷ்டிகரான பரலோகத்தின் தேவனை நாங்கள் விசுவாசிப்பதற்கான காரணம், இந்த பூமியில் நாம் வாழும் அறிவுப் பூர்வமான வாழ்க்கை தான். இந்த பூமியானது தாவரங்களையும், மிருகங் களையும் மாத்திரம் உடையதாயிராமல், மனிதனும் இந்த பூமியில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் மற்ற ஜீவராசிகளோடு ஒப்பிடும் போது உயர்வானவனாயிருக்கிறான். மனித இனத்திற்கு மட்டும் தான் சிந்திக்கும் திறனும், காரண காரியங்களை அறியும் திறனும் இருக்கிறது. அது மட்டுமல்ல, காலப் போக்கில் மனிதன் தன் அறிவில் அபரிதமான வளர்ச்சியை அடைந்திருக்கிறான். அதன் பொருள், மனிதனுக்கு தன்னு டைய மூதாதையரிடமிருந்து கற்றுக் கொள்ளும் திறனும், அவர்களிட மிருந்து பெற்றுக் கொண்ட அறிவை வளர்த்துக் கொள்ளும் அறிவும் இருக் கிறது. இன்னும் அதன் பொருள், ஒரு புத்திசாலியான சிருஷ்டிகர் தான் இவைகளுக்கெல்லாம் பொறுப்பாளியாயிருக்கிறார் என்பது. ஆனால், மிருகத்தின் வாழ்க்கையைப் பாருங்கள். அது, ஆரம்பத்திலிருந்தே ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இது, ஞானமுள்ள சிருஷ்டிகர் மிருக ஜீவன் களையும், மற்றெல்லாவற்றையும் மனிதனுடைய பயன்பாட்டிற்காகத்தான் வைத்திருக்கிறார் என்பதையே காட்டுகிறது. வேதாகமத்தில், ஆதியாகமம் புத்தகம் ஒன்றாம் அதிகாரத்திற்குத் திரும்பும் போது, தேவன் வானத்தை யும், பூமியையும் சிருஷ்டித்து, பின்பு பூமியில் ஊரும் பிராணிகள், ஆகாயத் துப் பறவைகள், நீர் வாழ் ஜந்துக்கள் உட்பட எல்லாவற்றையும் அதில் சிருஷ்டித்தார் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பின்பு, கடைசி யாக தேவன் ஆணையும், பெண்ணையும் சிருஷ்டித்தார். ஆதியாகமம் 1:28-ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம். *"பின்பு தேவன் அவர்களை நோக்கி; நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துகளையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்"*.

மூன்றாவது, மனிதன் ஆவியை உடையவனாகவும், சரீரத்தை உடையவனாகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால், தேவன் தான் மனிதனுடைய சிருஷ்டி கர்த்தர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் என்று ஆதியாகமம் 1:27-ல் நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும், நாம் இப்படியாக வாசிக்கிறோம். *" தேவனாகிய கர்த்தர்*

*மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் என்று* " (ஆதி. 2:7). *இதைப் புரிந்து கொள்வதற்கு தேவன் ஆவியாயிருக்கிறார் என்கின்ற உண்மையை நாம் அறிந்திருக்க வேண்டும்* (யோவான் 4:24). மனிதன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான் என்று சொல்லும்போது, அதன் பொருள், தேவன் மனிதனை என்றென்றும் அழியாத ஆத்துமாவை உடையவனாக சிருஷ்டித் திருக்கிறார் என்பதேயாகும். சரீரத்தையும், ஆத்துமாவையும் பற்றிப் பேசும் போது, ஞானி சாலொமோன் இப்படியாகச் சொல்கிறார். "*இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை* " (பிரசங்கி 12:7) என்று. இது, சரீர மானது மரித்து பூமியின் மண்ணுக்கு திரும்புவதைக் குறிக்கிறது, ஆனால், மனிதனுடைய ஆவியானது தொடர்ந்து வாழ்ந்து தன்னைத் தந்த தேவனிடத் திற்குத் திரும்புகிறது. இதுவே மனிதன் தேவனை விசுவாசிப்பதற்கு மற்று மொரு பலமான காரணமாகும். எல்லாவற்றுக்கும் முடிவாயிருக்கும்படி யார்தான் மரிக்க விரும்புவர்? தேவனை நம்ப மறுக்கிறவர்களைப் பொறுத்தவரை, இவைகளைத் தான் மனிதன் எதிர்நோக்க வேண்டியவனா யிருக்கிறான். ஆனால், தேவனை விசுவாசிக்கிற ஒருவர் வாழ்க்கையை இப்படியாக வாழ்வதற்குப் பெற்றிருப்பதோடு, அவருடைய சரீர மரணத் திற்குப் பிறகும் அவருடைய ஆவி அல்லது ஆத்துமா என்றென்றும் வாழ்கிற தாயிருக்கும். இயேசு இப்படியாகச் சொன்னார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், " *பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்* " (யோவான் 5:28,29).

நான்காவது, தேவனுடைய சிருஷ்டிப்பின் ஒற்றுமையினிமித்தம் நாங்கள் அவரை விசுவாசிக்கிறோம். காலங்கள், தட்ப வெப்ப நிலை, தாவரங்கள், கடல் ஜீவன்கள் மற்றும் மனித ஜீவன்கள் இந்த பூமியில் ஒன்றிணைந்து வாழ்ந்து, ஒவ்வொன்றும் மற்றொன்றை முழுமையாக்கு கிறது. ஒவ்வொன்றும் பிழைப்பதற்கு மற்றொன்றைச் சார்ந்திருக்கிறது. ஆனால், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் எல்லாம் எப்படி? அவைகள் எல்லாம் சரியான தூரத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு, சூரியன் பூமிக்கு சற்று அருகில் இருந்திருந்தால் கூட அதிக வெப்பத்தினால் பூமி அழிக்கப்பட்டு விடும், அதே நேரத்தில் சூரியன் பூமியிலிருந்து சற்று கூடுதலான தூரத்தில் இருந்தால் அதிக குளிர் காரணமாக பூமி உறைந்து விடும். எத்தனை ஆச்சரியம் தேவனுடைய சிருஷ்டிப்பு! முன்பொரு காலத்தில் சங்கீதக்காரனாகிய தாவீது தேவனை இப்படியாக புகழ்ந்து பாடி யிருக்கிறார். " *வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத்*

*தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும், அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப் போலிருந்து, பராக்கிரமசாலியைப் போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது "* என்று. (சங்கீதம் 19:1-5).

ஐந்தாவது, தேவன் இருக்கிறார் என்பதை நாங்கள் விசுவாசிப்பதற்கான காரணம், பரிசுத்த வேதாகமம் அப்படி போதிப்பது தான். வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய, ஒட்டு மொத்த உலகத்திலும் சிறந்த புத்தகமாகத் திகழ்கிறது. இந்தப் புத்தகம் தேவன் சர்வத்தையும் சிருஷ்டித்தார் என்பதை சித்தரிக்கிறது. மேலும், *வேதாகமம் தேவனை வல்லமையுள்ள தேவனாக, நித்தியப் பிதாவாக* (ஏசாயா 9:6) *மெய்யான ஜீவனுள்ள தேவனாகக்* (எரேமியா 10:10) காட்டுகிறது. *அது மட்டுமல்ல, வேதாகமம் தேவன் ஆவியாயிருக்கிறார்* என்றும் (யோவான் 4:24), *தேவன் அன்பாகவே இருக்கிறார்* என்றும் (1யோவான் 4:8), *அவர் பட்சபாதமுள்ளவரல்ல என்பதையும் காட்டுகிறது.* (ரோமர் 2:11). *தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல என்பதையும் காட்டுகிறது* (யாக். 1:13). நம்மை அவரோடு பரிச்சயப்படுத்தவும், அவர் தம்முடைய சிருஷ்டிப்போடு எப்படி இடைபடுகிறார் என்பதையும் நாம் காணும்படியாக நூற்றுக்கணக்கான வேறு காரியங்களும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆறாவது, அவர் ஒருவரே தேவனாக சொல்லப்பட்டிருக்கிறபடியால் நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம். எனவே, தேவனை மிஞ்சினவர் யாருமே இல்லை. பவுல் எபேசியர் 4:6-ல் இப்படியாக அறிவிக்கிறார். "*எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு; அவர் எல்லார் மேலும், எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர் என்று* ". நம் தேவன் எரிச்சலுள்ள தேவனாயிருக்கிறார். *அவர் தம்முடைய சிருஷ்டி உயிரற்ற சொரூபங்களையும், விக்கிரகங்களையும் பணிந்து கொள்வதை விரும்பமாட்டார். நீண்ட காலத்திற்கு முன்பாகவே இப்படியாகச் சொல்லப்பட்டது. "அந்நிய தேவனை நீ பணிந்து கொள்ள வேண்டாம்"* (யாத். 34:14). மறுபடியும், நாம் யாத்திராகமம் 34:17-ல் வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்க வேண்டாம் என்று சொல்லப்பட்டிருப்பதை வாசிக்கிறோம். மற்றுமொரு சந்தர்ப்பத்தில், தேவன் இப்படியாகச் சொன்னார். "*மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த்தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.*

*என்னிடத்தில் அன்பு கூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர் களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக் கிறேன்*" என்று (யாத். 20:4-6) விக்கிரக ஆராதனை நியாயமற்றது என்பதைக் காட்டுவதற்கு வேத வசனங்கள் மூலமாக இன்னுமொரு உதாரணத்தை நாம் காணலாம். "*ஒரு மனுஷன் ஒரு மரத்துண்டை எரித்து குளிர்காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான். அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்ளுகிறான், ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து அதை வணங்குகிறான்* " (ஏசாயா 44:15).

ஏழாவது, நாங்கள் தேவனை விசுவாசிப்பதற்கான காரணம், *நாம் இரட்சிக்கப்படவும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையை உடையவர் களாகவும் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பிக் கொடுத்ததினால் தேவன் நமக்கு இரக்கத்தைக் கூட்டி வழங்கியிருக்கிறார்.* (யோவான் 3:16,17; ரோமர் 5:8; எபேசியர் 2:8,9).

கடைசியாக, நாங்கள் தேவனை ஏன் விசுவாசிக்கிறோமென் றால், நாங்கள் அப்படி விசுவாசியாமல் போனால், அதற்கு மாற்றாக, சர்வ வல்ல தேவனையும், அவர் போதிக்கும் நித்திய ஜீவனையும் நாங்கள் நிராகரிக்க வேண்டியதாயிருக்கும். அதுமட்டுமல்லாமல், எல்லா காரியங்களுமே ஒரு விபத்தாக, தற்செயலாக நடந்தது என்றும், மனிதன் கீழான விலங்காகிய குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியினால் மனிதனாக மாறியிருக்கிறான் என்கின்ற கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதாகவுமிருக்கும். *இக்கருத்து வெறும் கொள்கை தான், இது நிரூபிக்கப்படாத நியாயமற்ற ஒன்று. சங்கீதக் காரன் இப்படியாகச் சொன்னார். "தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்* " (சங்கீதம் 14:1). தேவனை நிராகரிக்கிறவர்கள் அப்படிச் செய்வதற்கு சுதந்தரத்தைப் பெற்றிருக் கிறார்கள். ஆனால், நமக்கு இப்படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "*அந்தப் படி முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்கிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால், நம்மில் ஒவ்வொருவனும். தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்பு விப்பான்* " (ரோமர் 14:11,12).

நீங்கள் தேவனை விசுவாசிக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால், தயவு செய்து மேலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தேவனையும், அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவையும் விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனு டைய குமாரன் என்று உங்கள் வாயினால் அறிக்கை செய்து, பாவ மன்னிப்புக்கென்று தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றால், கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்துக் கொள்வார். நீங்கள் அப்படிச் செய்ய வேண்டுமென்பது தேவனிடத்தில் எங்கள் ஜெபமாயிருக்கிறது. ❋

பெண்கள் பகுதி

# தச்சனின் மனைவி

RR NAYAGAM

ஆபிரகாம் மனைவி சாராளை எடுத்துக் கொண்டால், தன் வாழ்நாள் பரியந்தம் ஓர் இளவரசியைப் போன்று இருந்தாள். ஆபிரகாம் செல்வச் சீமானாய் வாழ்ந்தான். சாராளுக்கு வேலைக்காரரும், கால்நடைச் செல்வங்களும் இன்னும் அவள் மனம் விரும்பிய யாவும் கிடைத்தன.

மரியாள் கூட ராஜ பரம்பரையான தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவள் என்பதை தவிர குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வேறு முக்கியத்துவம் அற்றவளாகவே இருந்தாள். மரியாள் ஒரு கன்னிப் பெண். அன்றைய நாட்களில் பல யூதப் பெண்கள் இருந்திருந்தாலும், மேசியாவின் வருகைக் கான நேரம் வந்தபோது இவளே சரியான கன்னிகையென தேர்ந்தெடுக்கப் பட்டாள். " *இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்* " (ஏசா. 7:14) என்ற தீர்க்க தரிசனம் நிறைவேறும்படி மரியாள் தேர்ந்தெடுக்கப்பட்டாள் என்பதை லூக்கா எழுதின நற்செய்தி நூல் முதலாம் அதிகாரம் 26 துவங்கி 33 முடிய உள்ள வசனப்பகுதியில் நாம் வாசித்து அறிந்து கொள்ளலாம். காபிரியேல் தூதனின் வார்த்தைகளை கேட்ட மரியாளின் பதிலாக " இது எப்படி ஆகும்? புருஷனை அறியேனே என்பதும், இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது " என்று வந்தது.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! இந்த 2013-ம் வருடத்தின் இறுதியில் நின்று கொண்டிருக்கும் ஸ்திரீகளாகிய நமக்கு தச்சனின் மனைவியாகிய மரியாள் என்ன பாடம் கற்றுக் கொடுக்கப் போகிறாள் என்று பார்ப்போம். அருமையானவர்களே! பழக்கத்துக்கும், வழக்கத்துக்கும் மாறான ஒரு செய்தியை தூதன் இவளிடம் கூறுகிறான். இதை ஏற்றுக் கொள்வதென்பது சாதாரண விஷயமா? கன்னிகையின் கர்ப்பம். யார் இதை ஏற்றுக்கொள்வார்கள்? மரியாள் இதை எப்படி வெளியே சொல்லுவாள்? தன் பெற்றோரிடம் என்ன கூறுவாள்? சமுதாயம் இவளை எப்படிப் பார்க்கும்? உறவுகளின் பிரதிபலிப்பு எப்படி இருக்கும்? சரி எல்லாவற்றையும் சமாளித் தாலும் இவள் உள்ளம் இதை எந்த வகையில் ஏற்றுக்கொள்ளும்? என்ன பாடுபட்டாளோ பாவம் மரியாள். என்ன செய்வதென்பதை புரிய பெலனற்ற மரியாள் " இதோ, நான், ஆண்டவருக்கு அடிமை என்பதைத் தவிர வேறு சரியான பேச்சு எதுமே தெரியாத மரியாள் தேவ சித்தத்தை அப்படியே ஒத்துக் கொண்டாள். யாருமே இதுவரை அனுபவித்திராத ஓர் புது அனுபவம் இது. தூதனின் வார்த்தைகளில் கலங்கிப்போய் மாற்று யோசனை சொல்லத் தெரியாதவளாய் இருந்தாள் மரியாள். பொதுவாக இந்தச் சூழ்நிலையில் ஒரு கன்னிப்பெண் என்ன செய்திருப்பாள்? தூதனிடம் வாக்குவாதம் செய்திருப்பாள். முதலில் என் அம்மாவிடம் இதைப் பற்றி பேசவேண்டும்

என்பாள். யோசேப்பு என்ற மனிதன் என்ன சொல்வான்? தூதனின் பேச்சையும், என் பேச்சையும் அவன் ஏற்றுக் கொள்ளமாட்டானே என்போம். சம்பந்தப் பட்டவர்களோடெல்லாம் ஆலோசனை செய்து விட்டு பிறகு வந்து சொல்லு கிறேன் என்போம். ஆனால், மரியாள் இதில் எந்த வகையாகவும் செயல் படவில்லை.

மாறாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இந்த ஸ்திரீ என்ன செய்தாள்? " அந்நாட்களில் மரியாள் எழுந்து மலை நாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்கு தீவிரமாய் போய், சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள் " (லூக். 1:39,40). மரியாள் ஏன் எலிசபெத் வீட்டிற்குச் சென்றாள்? எலிசபெத்தால் மட்டுமே இந்த அதிசயத்தை புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால், எலிசபெத்தும் வயது சென்ற காலத்திலே கர்ப்பந்தரித்திருந்தாள் (லூக். 1:7,24). தனக்கே காலங்கடந்து கர்ப்பம் உண்டாயிருக்கும் போது கன்னிகை கர்ப்பவதியாவது சாத்தியம் என்பதை இவளால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

இங்கே மரியாளின் ஞானமான செயலை நாம் கவனித்தாக வேண்டும். சரியான இடத்திற்குச் செல்கிறாள். இங்கேதான் நாம் தவறு செய்துவிடு கிறோம். என்ன செய்வது? இந்த பிரச்சனையை எவ்வாறு கையாளுவது? என்ற கேள்வி வரும்போது நாம் கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் போவ தில்லை. உறவுகள், இனத்தார், செல்வந்தர்கள், செல்வாக்குள்ளவர்கள் என்று இவர்களை நாடி செல்வதினால் முற்றிலும் தேவ விரோத செயல்கள் நடைபெற காரணமாகிவிடுகிறோம். தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்காமல் உலகத்தை நாடி செல்வதினால் முற்றிலும் தேவ விரோத செயல்கள் நடைபெற காரணமாகிவிடுகிறோம். தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்காமல் உலகத்தை நாடி மக்களோடு மக்களாக சென்று விடு கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வர்கள் என்பதை மறந்து விடுகிறோம். எனவே, விசுவாசம் கிரியையில்லாமல் போய் விடுகிறது. இங்கே மரியாள் எலிசபெத்திடம் செல்கிறாள். மரியாளின் இருதயத்தை அறிந்த அன்பே உருவான நம் தேவன் எலிசபெத்தின் வாயில் என்ன வார்த்தைகளை வைக்கிறார்? " என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது " லூக்கா 1:43 நம்பவும், ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்த மரியாளுக்கு இந்த வார்த்தை எவ்வளவு நம்பிக்கையையும் ஆறுதலையும் கொடுத் திருக்கும்! நம் தேவன் எவ்வளவு நல்லவர் பாருங்கள். அவர் எப்போதும் நம்மை ஊக்கப்படுத்தும் சூழ்நிலை களையே அமைத்துக் கொடுக்கிறார். பல சமயங்களில் நாம் தான் திசை மாறி சென்று பிரச்சனையில் சிக்குவ தோடு, தேவ சித்தத்திற்கும், வேத வசனங்களுக்கும் விரோதமாக செயல் பட்டு விடுகிறோம். மரியாளைப் போல தேவனுடைய பிள்ளைகளோடு சாவகாசம் வைப்போம்.

அதன் பிறகு நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பெத்லேகேமிலே பிறந்து வளர்ந்தது பிறகு ஊழியம் செய்தது நாம் அனைவரும் அறிந்த ஒன்று.

இந்தக் கால கட்டங்களில் மரியாளுக்கும் இயேசுவுக்கும் இடையே நடைபெற்ற சந்திப்புகளில் மரியாள் எவ்வாறு நடந்து கொண்டாள் என்று பார்ப்போம். இயேசுவுக்கு 12 வயதான போது யோசேப்பும், மரியாளும் அவரைக் கூட்டிக் கொண்டு எருசலேமுக்கு போனார்கள். திரும்பி வரும்

போது பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்து விட்டார். இது மரியாளுக்கு தெரியாது. அவரைக் காணோம் என்றவுடனே தேடிக் கொண்டு சென்று தேவாலயத்தில் அவரைக் கண்டு. மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும், நானும் விசனத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள்.

மீண்டுமாக கானா ஊர் கலியாணத்தில் திராட்சை ரசம் குறைவுபட்ட போது மரியாள் இயேசுவுக்கு அறிவிக்கிறாள். அதற்கு இயேசு, ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்கிறார். அவர் தேவனுடைய குமாரன் என்பதை நன்கு அறிந்தவள்தானே மரியாள். எனவே, மறுத்தரம் சொல்லாமல், கோபமும் அடையாமல் சீஷர்களிடம், அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள் (யோவான் 2:5).

மூன்றாவதாக, ஒரு முறை மரியாளும், இயேசுவின் சகோதரரும் அவரிடத்தில் பேச நின்றபோது சீஷர்கள் இயேசுவுக்கு இதை அறிவிக் கிறார்கள். அதற்கு இயேசு பதிலாக, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும் தாயுமாய் இருக்கிறார்கள் என்றார். (மத். 12:49,50) ❋

## நாளும், நடப்பும்

1. ஜாதி, வகுப்பு மோதல்களைத் தூண்டினால் கடும் நடவடிக்கை – முதல்வர்
2. லோக்பால் மசோதா நடப்புக் கூட்டத் தொடரில் நிறைவேற வாய்ப்பு.
3. இந்தியப் பொருளாதார மந்த நிலையில் தமிகழ வளர்ச்சி பாதிப்பு – தமிழக அரசு
4. இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு.
5. நிறவெறியை எதிர்த்துப் போராடி சரித்திரம் படைத்த தென் ஆப்பிரிக்காவின் நெல்சன் மண்டேலா மரணம்.
6. மங்கள்யான் விண்கலம் சீரான வேகத்தில் பயணிக்கிறது – ஆய்வு மையம்.
7. தென் ஆப்பிரிக்கா சென்றுள்ள கிரிக்கெட் அணி ஒரு நாள் தொடரில் படுதோல்வி.

வாலிபர் பகுதி

# பாவத்தைப் பற்றிய பறவைப் பார்வை

Bro. Benny Martin

**வா**லிபக் கண்மணிகளுக்கு நசரேயனாகிய இயேசுவின் நல் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக காண்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இப்பாழாய்ப் போன பாரில் பரிதபித்துக் கொண்டிருக்கிறோம். நாம் விரும்பாவிட்டாலும் திரும்பிய பக்கம் எல்லாம் பாவம். கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடமற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (பிலி. 2:15). பாவம் செய்யப் பழகிப்போன நம் மக்களின் ஆத்தும நிலையை எண்ணிப்பார்த்தால் நமக்குப் பாவமாக இருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் நம் பிதாவாகிய தேவன் பாவத்தைப் பார்க்கக்கூடாதவராயிருக்கிறார், அதனால், அவருடைய பிள்ளை களாகிய நாமும் பாவத்தைப் பார்த்து அருவறுக்கிறோம். அது மட்டுமல்ல, இப்படி பாவச் செயல்களில் ஈடுபடுவர்களிடம் நாம் போய் இதை விட்டு நீங்கள் மனந் திரும்புங்கள், பாவம் உங்களை பதம் பார்த்து விடும், நீங்கள் பாவத்திற்கு அதிக விலை கொடுக்க வேண்டி யிருக்கும் என்று சொல்லும் போதெல்லாம் அவர்கள் நம்மீது வீசும் பார்வையும், நம்மை தலைகுனியச் செய்கிறது. அதுவும் போதா தென்று, அவர்களுடைய ஆத்துமாக்களை அகல பாதாளத்திற்கு அழைத்துச் செல்கின்ற காரியம் என்னவென்றால், பாவத்திற்குப் பின் விளைவுகள் அல்லது பக்க விளைவுகள் எதுவுமில்லை என்கிற மெத்தனப் போக்குதான். பிரியமான வாலிபர்களே, வேத வசனம் "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடைவோம்" என்று எச்சரிப்பு விடுக்கிறது (2 கொரி. 5:10) பாவத்தின் பக்க விளைவுகளைப் பற்றிய பறவைப் பார்வை இதோ.

## *1. உலகளாவிய விளைவுகள்*

அண்ட சராசரங்களை உருவாக்கின் நம் தேவன் மனிதன் வாழும் படியாக மாசற்ற, தூய்மையான ஒன்றாக இப்பூமியை உண்டாக்கினார். ஆனால், மனித இனத்தின் பாவத்தின் விளைவாக நோவாவின் நாட்களில் தேவன் இப்பூமியில் மிகப்பெரிய ஜலப்பிரளயத்தை உண்டு பண்ணினார். அப்போது மகா ஆழத்தின் ஊற்றுக் கண்களெல்லாம் பிளந்தன. வானத்தின் மதகுகளும் திறவுண்டன. நாற்பது நாள் இரவும் பகலும் பூமியின் மேல் பெருமழை பெய்தது (ஆதி. 7:11). அந்நாட்களிலேயே இப்பூமி உருக் குலைந்தது. பூமியின் தட்பவெப்ப மண்டலங்கள் தடம் புரண்டன. இப்பூமிக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் இன்று நாம் எதிர்கொள்ளும் புயல், சூறாவளி போன்றவைகளுக்கு வழிவகுத்தன. பூமிக்கு அடியில் உள்ள

தட்டுகள் நிலைமாறியபடியால் இன்று பூகம்பங்கள் ஏற்படுகின்றது சுருக்க மாக சொல்லப் போனால் இன்று ஏற்படும் இயற்கை சீற்றங்களுக்கெல்லாம் (ஆதி. 6,8) அதிகாரங்களில் ஏற்பட்ட சம்பவங்கள் தான் வித்திட்டன. இதற்கு ஏராளமான, தாராளமான புவியியல் மற்றும் தொல்பொருள் ஆதாரங்கள் உள்ளன. தேவன் இவ்வுலகை உண்டாக்கினார் என்பதை சந்தேகப்படும் சந்தேகப் பேர் வழிகள் கூட ஆரம்ப நாட்களில் இப்பூமி மிதமான, ஒரே மாதிரி யான, சமச்சீரான தட்பவெப்ப நிலையை கொண்டிருந்ததை தாவர மற்றும் மிருகங்களின் படிமங்களைக் கொண்டு உறுதி செய்கின்றனர். பழங்கால நாகரீகங்களை ஆராய்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அக்காலத்து உலகம் மாசற்ற, நோயற்ற ஒன்றாக இருந்ததை கண்டறிந்திருக்கின்றனர். எனவே, பாவம் ஆரம்பத்திலிருந்தே மனித இனத்திற்கு சாபத்தையும், ரோகத்தையும் கொண்டு வந்திருக்கிறதை கண்டறிந்துவிட்டீர்களா?

### II *சரீரப்பிரகாரமான விளைவுகள்*

மனித இனத்துக்கு மரணமும் அதற்கு முந்தைய பிரச்சனைகளும், உபாதைகளும், சிருஷ்டிகருக்கு அது கீழ்ப்படியாமல் போனதினால் உருவான விளைவுகள் தான். ஆதியில் ஏதேன் தோட்டத்தில் தேவனுடைய கட்டளையை மீறியதால் மனிதன் பாவம் செய்தான். அதன் விளைவாகத் தான் மனிதனுக்கு மரணம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் அது ஆவிக்குரிய மரணமாக இருந்தாலும், பல கட்டங்களை உடல் கடந்து இறுதியில் சரீர மரணத்தைக் கண்டது. தேவனிடத்திலிருந்து மனிதன் பிரிவதை ஆவிக்குரிய மரணமென்றும், உடலில் இருந்து ஆவி பிரிந்து போவதை சரீர மரணம் என்றும் அழைக்கிறோம்.

இன்று மனித இனம் வியாதியினால் வியாகுப்படுவதற்கான காரணமே மனிதன் ஆரம்பத்தில் தேவனுக்கு விரோதமாக செய்த கலகம் தான் (ரோமர் 5:10). அதனால், நம் சத்துருவாகிய மரணம் நம்மை மேற் கொண்டது. அது முதல் நம்முடைய பிறப்பிலிருந்தே மரணம் நம்மை நிழல் போல் தொடர்ந்து வருகிறது. சிலரை அது முன்பாகத்தாக்குகிறது. சிலரை அது சற்று சாவகாசமாக தாக்குகிறது. ஏனென்றால், அது மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி. 9:27). பாவம் தொன்றுதொட்டு மனித இனத்தை எவ்விதமாகப் பதம் பார்கிறதென்று பார்க்கிறீர்களா? இன்றும் அதன் தாக்கம் தீரவில்லை. பிசாசானவன் ஆதியிலிருந்து கொலை பாத கனாயிருந்து எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திருகிற படியால் நாம் விழித்திருந்து ஆவியையும், ஆத்துமாவையும் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய பெரும்பாலான சரீர உபாதைகளுக்கு காரணம் நம்முடைய தீய பழக்கவழக்கங்கள், துக்கம், பொறாமை, பகை உணர்வு போன்றவைகள் என்றறிந்து அவைகளை நம்மை விட்டு முற்றும் அகற்ற வேண்டும்.

## III ஆவிக்குரிய விளைவுகள்

நாம் செய்யும் பாவங்களுக்கு நாம் கொடுக்கும் அதிகப்படியான விலை ஆவிக்குரிய மரணத்தை சந்திப்பது தான். இதைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி இவ்விதமாகச் சொல்கிறார். " இதோ, இரட்சிக்கப்படாத படிக்குக் கர்த்தருடைய கை குறுகிப் போகவுமில்லை; கேட்கக் கூடாத படிக்கு அவருடைய செவிமந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்கு கிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்கு செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது " (ஏசாயா 59:1,2).

பிரியமான வாலிபர்களே, பெரும்பாலானவர்கள் பாவத்தினால் ஏற்படும் சரீரப்பிரகாரமான விளைவுகளைப் பற்றி பயப்படுகிறார்கள், பயந்து பாவத்தைக் களைய முற்படுகிறார்கள். ஆனால், ஆவிக்குரிய மரணத்தைப் பற்றிய அறிவோ, அக்கறையோ அறவே இல்லை. நம் உடலில் இருந்து ஆவி பிரிந்து போவதை எப்படிசரீர மரணமென்று அழைக்கி றோமோ, அதேபோல், தேவனிடத்திலிருந்து நாம் பிரிவதை ஆவிக்குரிய மரணம் என்று அழைக்கிறோம். இவ்வுலகத்தை உண்டாக்கி, நம் பாவங் களுக்குப் பரிகாரியாக தம்முடைய ஒரே பேறான குமாரனையே அனுப்பிக் கொடுத்த தேவனோடு ஆவிக்குரிய உறவை நாம் முறித்துக் கொண்டால் அதன் விளைவை நம்மால் தாங்க முடியாது. தேவனற்ற ஒரு வாழ்க்கையை நம்மால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது. இவ்வுலகில் கோடிக் கணக்கான மக்கள் மெய் தேவனாகிய நம் தேவனை தொழுது கொள்ள மறுத்து, அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதை வெறுத்து, தங்கள் வாழ்க்கையில் ஒரு வெற்றிடத்தை அவர்களாகவே ஏற்படுத்தியிருக் கிறார்கள். அதேபோல் சபையிலும் பலர் பாவத்தின் கோரத்தன்மையை உணராதவர்களாக தங்கள் மனம்போன போக்கில் வாழ்ந்து, தேவ கோபாக் கினையை தங்கள் மேல் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து " அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் " என்று நியாயத்தீர்ப்பு நாளிலே சொல்லாதபடிக்கு, தேவனோடு கொண்டிருக்கும் உறவில் விரிசல் ஏற்படாதபடி அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் (மத். 7:23).

பிரியமான வாலிப உள்ளங்களே! பாவம் ஒரு மோசமான, கொடூரமான எஜமான், அது ஒருவரிடமிருந்து எல்லாவற்றையும் கொள்ளை யடித்து, அவருக்கு எந்த நன்மையையும் கொடாமல் விட்டுச் செல்கிறது. இந்த பாவந்தான் நம்மையும் தேவனையும் இவ்வுலகிலும், நித்தியத்திலும் பிரிக்கிறது. தேவனையும், நம்மையும் பிரிக்கின்ற அந்த பாவம் நமக்கு தேவை தானா? பாவமற்ற வாழ்க்கையை நாம் இவ்வுலகில் வாழும் போது பாழாய்ப் போன இப்பாரிலிருந்து பரலோகத்தின் தேவன் நம்மை விடுவித்து மரணமில்லாத, துக்கமில்லாத, அலறுதலில்லாத, வருத்தமில்லாத "பரலோகத்திற்கு கொண்டு செல்வார் " அதற்கு நாம் ஆயத்தமாவோமாக!

# " பவுலாகிய சவுல் "

Dr. ABEL R. NAYAGAM

எனக்குப் பிரியமான குழந்தைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உன்னதமான நாமத்தில் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருக்கிறீர்களா? அரையாண்டு தேர்வு முடிந்து விட்டது! விடுமுறையும் ஆரம்பித்து விட்டது!! அதுமட்டுமா? புது வருடத்தையும் காணப்போகிறீர்கள்!!! இவ்வேளையிலே இந்த வருடம் முழுவதும் உங்களைப் பாதுகாப்பாக வைத்த தேவனுக்கு நன்றி செலுத்த நீங்கள் மறந்துவிடகூடாது.

இந்த மாதம் நாம் சவுல், பவுலாக மாறிய சம்பவத்தைக் கற்றுக் கொள்வோம். சரியா? அப். 9ஆம் அதிகாரத்தில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. சவுல் என்பவன், தேவனுடைய பிள்ளைகளையும், கர்த்தருடைய சீஷர்களையும் பயமுறுத்துகிறவனாகவும், துன்பப்படுத்திக் கொலை செய்கிறவனாகவும் இருந்தான். ஆனால், அந்தச் சவுலே, பவுலாக மாறி புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 14 புஸ்தகங்களை எழுதியுள்ளார். எப்படி இது நடந்தது? கொலை செய்யத் திரிந்தவர் எப்படி வேத எழுத்துக்களைக் கொண்ட நிருபங்களை எழுதினார்? அந்த சம்பவத்தைத் தான் இன்று நாம் கற்றுக்கொள்ள போகிறோம்.

வழக்கம் போல கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்தி கொலை செய்யும்படி அவன் எருசலேமிலிருந்து பிரயாணப்பட்டு " தமஸ்கு " என்ற ஊருக்கு சமீபமாக வந்து கொண்டிருந்தான். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு ஒளி உண்டாகி, சவுலைச் சுற்றி பிரகாசித்தது. அப்பொழுது அவன் பயந்து தரையிலே விழுந்தான்.

அப்பொழுது, " சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்" என்கிற ஒரு சத்தம் அவனுக்கு உண்டானது. அதற்கு சவுல், " ஆண்டவரே, நீர் யார்? " என்றான். அதற்கு கர்த்தர், " நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம் " என்றார். (அப். 9:5)

இதைத் தொடர்ந்து சவுல் மூன்று நாள் பார்வையில்லாதவனாய், புசியாமலும், குடியாமலும் இருந்தான். கர்த்தர் அதேடு தமஸ்கு பட்டணத்திலே அனனியா என்ற ஒரு தேவ மனிதனை ஆயத்தப்படுத்தி, சவுல் என்ன செய்ய வேண்டும் என்று அவன் மூலமாக வெளிப்படுத்தினார். கர்த்தர் அனனியாவிடம் " அவன் (சவுல்) புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரம் " என்று கூறினார். (அப். 9:15)

பின்னர் அனனியா சவுலை பார்க்க சென்ற போது, சவுல் பார்வை யடைந்து ஞானஸ்நானம் பெற்றான்.

அதன் பின்பு, சவுல், பவுலாக மாறி தேவனுடைய காரியங்களில் அதிக ஆர்வமுடையவனாய் செயல்பட்டு, பாடுகளுக்கு மத்தியிலும் கிறிஸ்துவைக் குறித்து, அநேகருக்கு அறிவித்தான். (2 கொரி. 11:23,28)

சரி, பவுலாக மாறிய சவுல், குழந்தைகளாகிய நமக்கு என்ன அறிவுரை வழங்கியிருக்கிறார்? ஆம் எபே. 6:1,3 வசனங்களில், " பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் என்றும் உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக " என்றும் கூறுகிறார்.

அப்படியானால், நாம் நம்முடைய தகப்பன்மார்களையும், தாய்மார்களையும் உண்மையில் கனப்படுத்துகிறவர்களாக, அதாவது, உரிய மாரியாதை கொடுக்கிறவர்களாக உள்ளோமா? நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய உண்மைப் பிள்ளைகளாய் வாழ்வதற்குத் தேவையான தேவ ஆலோசனைகள் வழங்கும்போது அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறோமா? சொல்லுங்கள். நம் தேவன், மேலே இருந்து நாம் இப்படிச் செய்கிறோமா என்று கவனித்துக் கொண்டே இருக்கிறார். இந்தப் பூமிக்குண்டான ஆசீர்வாதங்கள் நாம் கொடுக்கும் கனத்தோடும், நாம் காட்டும் கீழ்ப்படிதலோடும் சம்பந்தப்பட்டிக்கிறதென்பது நாம் மறக்கக் கூடாது. நான் சொல்லுகிறது புரிகிறதா, பிள்ளைகளே!

சரி, குழந்தைகளே! சவுல் எப்படி பவுலாக மாறினார் என்றும், அவர் நமக்கு என்ன அறிவுரை கொடுத்திருக்கிறார் என்றும் கற்றுக் கொண்டோம். அப்படியாகச் செய்வீர்கள் என விசுவாசிக்கிறேன். ✳

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்

## ஜெபியுங்கள்

1. புதிய ஆண்டில் ஏராளமானவர்களுக்கு உண்மைச் சத்தியம் கொண்டு செல்லப்பட
2. அநேக ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிய
3. தேவனை நேசிக்கும் அநேகர் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின் மேன்மையை உணர்ந்து ஏற்றுக் கொள்ள
4. " திருமறை தியானம் " தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக
5. " திருமறை ஆசான் " மாத இதழ் மூலம் இன்னும் அநேகர் சத்தியத்தை அறிந்து கொள்ள
6. " உயர்நிலை வேத கல்வி " யை அஞ்சல் வழியில் படிப்பவர்களுக்காக
7. " சத்தியத்தின் குரல் " காலாண்டு இதழ் மூலம் அநேகருடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

**Bro. J.H. James Rajakumar**

(சென்ற மாத தொடர்ச்சி)

இப்பொழுது புதிய ஏற்பாடு அல்லது புதிய உடன்படிக்கைக்கு வருவோம். புதிய ஏற்பாட்டு சட்டங்கள் எங்கேயிருக்கிறது. அவைகள் என்னென்ன என்பது இக்காலத்தில் மக்களுக்கு புரியாத புதிராயிருக்கிறது. அவைகளை வாசித்து அல்லது கேட்டு மனதில் வைத்து அதன்படி நடக்க வேண்டும் என்பதும், ஏதோ அந்நிய காரியமாயிருக்கிறது. ஆனால், தேவனுடைய இன்றைக்கான தீர்மானம் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே மணவாளன் (2 கொரி. 11:2; வெளி. 19:7,9) அவருடைய சுவிசேஷ சத்தியத்திற்கு, உபதேசத்திற்கு கீழ்ப்படிகிறவர்களே சபையாகிய அவருடைய மணவாட்டி (எபே. 5:23,27,32; மத். 25:1,12). அநேக ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் ஒரு சகோதரன் திருமண உடன்படிக்கை என்று அழைப்பிதழ் அச்சிட்டு சபையாருக்கும் மற்றும் அநேகருக்கும் கொடுத்தார். அதில் மண மகனுக்கான கட்டத்தில் இயேசு கிறிஸ்து என்றும், மண மகளுக்கான கட்டத்தில் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிகிறவர்கள் என்றும் அச்சடித்திருந்தார். அநேகர் வந்தார் அந்த திருமணத்திற்கு ஆனால், அது ஒரு ஞானஸ்நான நிகழ்ச்சி. இது கேட்பதற்கு விநோதமாயிருந்தாலும் இதான் உண்மை. இயேசு கிறிஸ்து நம்முடைய மணவாளன் கீழ்ப்படிகிறவர்கள் அவருடைய மணவாட்டி, அவருக்கு என்று சொல்லும் போது முதலாவது அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் (அறிக்கை செய்ய வேண்டும்) பிறகு அவருடைய புதிய உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிய வேண்டும்) கிறிஸ்து மணவாளன்; சபை மணவாட்டி என்றால் திருமணம் எப்போது நடைபெறுகிறது ஒப்பந்தம் அல்லது திருமண உடன்படிக்கை எப்போது நடைபெறுகிறது? என்கிற கேள்வி எழலாம். அதற்காகத்தான் பூமிக்குரிய வாழ்க்கையின் திருமணத்தைக் குறித்து நாம் ஏற்கனவே கவனித்தோம்.

திருமணத்தில் மணமகன், மணமகள் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு பெயரையும், அங்கீகாரத்தையும் அறிக்கை செய்ய வேண்டும் என்று பார்த்தோம். இதைத்தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தாம் பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்தாலும் புதிய ஏற்பாட்டின் காலத்தில் நடைபெறப்போகும் உடன்படிக்கையைக் குறித்து மத். 10:32ல் " மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் " என்றார், இயேசுவானவர் பேசின எல்லா வார்த்தைகளும் தேவனுடைய வார்த்தைகள். நம்முடைய பிதாவாகிய தேவனும், நம்முடைய

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் ஏதோ சாதாரணமாக ஒரு வார்த்தையை அல்லது ஒரு வசனப்பகுதியை சொல்லவில்லை. அதற்கு பின்னால் பெரிய ஆவிக்குரிய மற்றும் சில நேரங்களில் பூமிக்குரிய வாழ்க்கையின் அர்த்தங்கள் இருக்கும் அதே போல ஒரு திருமணத்தில் மணமகனும், மணமகளும் ஒருவருக்கொருவர் அன்போடும் ஒருமித்தும் ஏற்றுக்கொண்டும் வாழ்வதற்கு ஒப்புதல் சொல்வதைப் போல ஆவிக்குரிய வாழ்க்கையில் கிறிஸ்து மணவாளனாகவும் நாம் அவருடைய மணவாட்டியாகவும் வாழுவதற்கு ஒப்புதல் சொல்வது அல்லது உடன்படிக்கை செய்வது இந்த வசனமாகும்.

அந்தப்படியே கிறிஸ்து தன்னை தேவனுடைய குமாரன் என்று சொன்னார் (யோவான் 10:34,36; 1 தீமோ..6:14) அவருடைய கிரியைகளும் அவரை தேவ குமாரன் என்றே விசுவாசிக்க வைக்கிறது. (யோவான் 20:30,31. ஆகையினால் தான் அப். 8:36,37ல் மந்திரியும், நசரேயனாகிய இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டார். கிறிஸ்து வானவர் உயிர்த்தெழுந்து இதை நிரூபித்தார் (ரோமர் 1:5,10; 6,10). இப்படி கிறிஸ்துவை நாம் தேவனுடைய குமாரராக கேள்விப்பட்டு, விசுவாசித்து, அவருக்காக நம்மை மாற்றிக் கொண்டு (மனந்திரும்பி) அறிக்கை செய்யும் போது நாம் அவரை ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மணாளனாக ஏற்றுக் கொண்டோம். அவரும் நம்மை மணவாட்டியாக அங்கீகரித்து நம்முடைய பெயரை பிதாவுக்கு முன்பாக அறிக்கை செய்கிறார். இது உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம். இந்தத் திருமணம்; நமது புருஷனாக இயேசு வானவர் நம்மை இந்த பூமிக்குரிய வாழ்க்கையில் நம்மோடு இருந்து, (மத். 20:20). நமக்காக பரலோகத்தில் ஓர் இடத்தை ஆயத்தம் செய்து அங்கே நம்மை கொண்டு போய்ச் சேர்ப்பார். அங்கும் நம்மோடு வாழ்வார் என்பது அவருடைய பட்சத்தில் உறுதிமொழியாகும். யோவான் 14:1,7 நம் பட்சத்தில் நான் உம்முடைய (கிறிஸ்துவினுடைய) சுவிசேஷத்திற்கு சத்தியத்திற்கு உபதேசத்திற்கு விசுவாசத்தோடு எல்லா நற்கிரியை களோடும் மரணம் வரை கீழ்ப்படிந்து நடப்பேன் என்பது நமது உறுதி மொழியாகும். நாம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்வதிலே (உடன்படிக்கை செய்வதிலே இவ்வளவு விஷயம் அடங்கி யிருக்கிறது) அதற்கு கீழ்படியும் முதல் கட்டம் ஞானஸ்நானம் அதிலும் அநேக ஆவிக்குரிய நிகழ்வுகள் இருக்கிறது. பூமிக்குரிய திருமணத்திற்கும், (உடன் படிக்கைக்கும்) பிதாவானவர் சாட்சியாயிருக்கிற கிறிஸ்துவை மணந்து கொள்ளுகிற ஆவிக்குரிய திருமணத்திற்கு (உடன்படிக்கைக்கும்) பிதாவே இடையில் இருக்கிறார். ஏனென்றால் நாம் செய்கிற அறிக்கையும் பிதாவானவர் பரலோகத்திலிருந்து பிதாவானவர் செய்கிற அறிக்கையும் பிதா வானவர் பரலோகத்திலிருந்து பிதாவானவர் கேட்கிறார். கிறிஸ்துவும் நம்மை அவரிடமே அறிக்கையிடுகிறார். இப்படியாக அறிக்கையிட்டு (உடன்படிக்கை செய்து) ஞானஸ்நானம் பெறுகிற நிகழ்ச்சி பூமியிலும் பரலோகத்திலும் ஒரே நேரத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சியாக இருக்கிறது. பாவத்தை அறிக்கை செய்யச் சொல்லி ஞானஸ்நானம் கொடுத்துவிட்டு நீ

இரட்சிக்கப்பட்டுவிட்டாய் என்று ஊழியரும் நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன் என்று நாமகரண உபதேச விசுவாசியும் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே. இவர்கள் தேவன் ஏற்படுத்தின திட்டத்தை மாற்றிவிட்டு இவர்களே புதிய தேவன்களாக புதிய திட்டங்களை உருவாக்கி அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியாமலிருக்கிறார்களே! இவர்களை நினைக்கும் போது பரிதாபப்படுவதை விட வேறென்ன செய்ய முடியும். மனந்திரும்ப தேவன் அவகாசம் கொடுத்திருக்கிறார், செய்தால் நல்லது.

மற்றுமொரு காரியம் நெஞ்சை பதறவைப்பதாக உள்ளது. அது என்னவென்றால், ஏசாயா 4:1ல் சொல்லப்பட்டது போல பெயர் மாத்திரம் கிறிஸ்தவர்கள் (கிறிஸ்து+அவர்கள்) ஆனால், கிறிஸ்துவானவர் சொன்ன ஒரு காரியத்தைக் கூட இவர்கள் திரும்பி பார்ப்பது இல்லை வேதத்தை திறந்தால் அதுவெல்லாம் நமக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டு சொந்தக் கதைகளை மணிக்கணக்காக பேசி கிறிஸ்து போதித்த சத்தியத்தை கேட்கமாட்டோம் என்கிறவர்கள் கிறிஸ்தவர்கள் என்கிற பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு, சபைக்கு அவர்கள் இஷ்டமான பெயர் வைக்கிறார்கள். உபதேசம் அவர்கள் இஷ்டமாக செய்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு சாதகமான வசனங்களை மாத்திரம் தேடி தெரிந்தெடுத்துக் கொண்டு மக்களை தங்கள் பக்கம் இழுப்பதிலே கவனமாயிருக்கிறார்கள் (லூக். 6:39).

பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும் என்று வேதத்தில் சொல்லியிருக்கிறதே என்று கேட்கலாம். குடும்பத்திலே இணைந்து விட்ட பிறகு தவறுதலாக ஒரு பிழை நடந்துவிட்டால் அப்பொழுது மன்னிப்பு கேட்கலாம். அப்பொழுதும் கூட கிறிஸ்துவின் மூலம் பிதாவினிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும். ஆனால் திட்டமிட்டு பாவம் செய்துவிட்டு அல்லது செய்து கொண்டு மன்னிப்பு கேட்கச் சொல்லி ஆண்டவர் சொல்லுகிறதில்லை. (1 யோவான் 5:16,17). ஒரு வீட்டிலே வாழச் சென்று விட்டு அந்த வீட்டாருடைய அல்லது சொந்த புருஷனுடைய பேச்சை கேட்காமல் அடுத்த வீடு பக்கத்து வீடு களில் உள்ளவர்களோடு தவறான உறவு வைத்திருந்தால் அது போன்ற பாவத்தை கணவன் வீட்டார் மன்னிக்கமாட்டார்கள். அதுபோல தான் கிறிஸ்தவன் என்கிற பெயர் வைத்துக் கொண்டு கிறிஸ்து சொன்னதை விட்டு விட்டு, மனித கற்பனைகள், பாரம்பரியங்கள், சடங்குகள், உபதேசங்கள் போன்ற காரியங்களிலே ஈடுபட்டால் கிறிஸ்து அப்படிப்பட்டவர்களை தள்ளி விடுவார் என்பதிலே எந்த சந்தேகமும் இல்லை (மத். 7:21,23). மேலும் அடுத்த மாதத்தில் எபி. 9ம் அதிகாரம் கவனிப்போம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

மற்றுமொரு காரியம் நெஞ்சை பதறவைப்பதாக உள்ளது. அது என்னவென்றால், ஏசாயா 4:1ல் சொல்லப்பட்டது போல பெயர் மாத்திரம் கிறிஸ்தவர்கள் (கிறிஸ்து+அவர்கள்) ஆனால், கிறிஸ்துவானவர் சொன்ன ஒரு காரியத்தைக் கூட இவர்கள் திரும்பி பார்ப்பது இல்லை வேதத்தை திறந்தால் அதுவெல்லாம் நமக்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டு

சொந்தக் கதைகளை மணிக்கணக்காக பேசி கிறிஸ்து போதித்த சத்தியத்தை கேட்கமாட்டோம் என்கிறவர்கள் கிறிஸ்தவர்கள் என்கிற பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு, சபைக்கு அவர்கள் இஷ்டமான பெயர் வைக்கிறார்கள். உபதேசம் அவர்கள் இஷ்டமாக செய்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு சாதகமான வசனங்களை மாத்திரம் தேடி தெரிந்தெடுத்துக் கொண்டு மக்களை தங்கள் பக்கம் இழுப்பதிலே கவனமாயிருக்கிறார்கள் (லூக். 6:39).

பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும் என்று வேதத்தில் சொல்லியிருக்கிறதே என்று கேட்கலாம். குடும்பத்திலே இணைந்து விட்ட பிறகு தவறுதலாக ஒரு பிழை நடந்துவிட்டால் அப்பொழுது மன்னிப்பு கேட்கலாம். அப்பொழுதும் கூட கிறிஸ்துவின் மூலம் பிதாவினிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும். ஆனால் திட்டமிட்டு பாவம் செய்துவிட்டு அல்லது செய்து கொண்டு மன்னிப்பு கேட்கச் சொல்லி ஆண்டவர் சொல்லுகிறதில்லை. (1 யோவான் 5:16,17). ஒரு வீட்டிலே வாழச் சென்று விட்டு அந்த வீட்டாருடைய அல்லது சொந்த புருஷனுடைய பேச்சை கேட்காமல் அடுத்த வீடு பக்கத்து வீடுகளில் உள்ளவர்களோடு தவறான உற்வு வைத்திருந்தால் அது போன்ற பாவத்தை கணவன் வீட்டார் மன்னிக்கமாட்டார்கள். அதுபோல தான் கிறிஸ்தவன் என்கிற பெயர் வைத்துக் கொண்டு கிறிஸ்து சொன்னதை விட்டு விட்டு, மனித கற்பனைகள், பாரம்பரியங்கள், சடங்குகள், உபதேசங்கள் போன்ற காரியங்களிலே ஈடுபட்டால் கிறிஸ்து அப்படிப்பட்டவர்களை தள்ளி விடுவார் என்பதிலே எந்த சந்தேகமும் இல்லை (மத். 7:21,23). மேலும் அடுத்த மாதத்தில் எபி. 9ம் அதிகாரம் கவனிப்போம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

✳

## நம் ஜீவன் எப்படிப்பட்டது?

1. கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறது (யாக். 4:14)
2. நம் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது (யோபு 7:6)
3. நாம் நாளைக்காக கவலைப்படக்கூடாது (மத். 6:34)
4. மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது (1 பேதுரு 1:24)
5. நாம் நம் நாட்களை எண்ண கற்றுக்கொள்ள வேண்டும் (சங். 90:12)

# ஐக்கியம் சம்மந்தமாக சில சிந்தனைகள்

**Bro. *Don W. Walker***

> "உமக்குப் பயந்து, உமது கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன்" [சங். 119:63].

சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதினார். "இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்த னை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" என்றுள்ளது (சங். 133:1). சில காரியங்கள் நன்மை சபை ஒழுங்கு அதற்குச் சரியான ஓர் உதாரணம். மறுபடியும், சில காரியங்கள் இனிமையாக நன்மையானதாக ஆனால், இதற்கு சிறந்த உதாரணம் பாவம் (எபி. 11:25). ஆனால், சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுவதோ நன்மையும், இன்பமுமானது.

நான் செய்த செயல் தேவனுக்கு மகிமையை உண்டாக்கியிருக்கிறது என்பதை அறிவது பலனளிக்கக்கூடிய ஓர் உணர்வாகும். ஆனாலும், யெகோவாவுக்கு மகிமையைக் கொண்டு வருபவர்களோடு நாம் கொண்டிருக்கும் உறவை நாம் உணரும் போது அந்த உணர்வு பெருகுகிறது.

ஒற்றுமையைச் சீர்குலைப்பவர்கள் பற்றி வேத வசனங்கள் போதிப்பதைக் கவனிக்கும் போது, ஒற்றுமை தேவனுடைய பார்வையில் எவ்வளவு முக்கியமானது என்பதை அறிந்து கொள்ள முடியும். நீதி. 6:16,19 வசனங்களில் கர்த்தர் வெறுக்கும் ஆறு காரியங்களை நாம் கற்றுக் கொள்கிறோம். ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவைகளில் ஏழாவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியம் சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் ஆகும். பவுல், அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் என்று சொல்கிறார் (ரோமர் 16:17).

அப்போஸ்தலனாகிய யோவான் ஐக்கியத்தின் அளவு கோலை இவ்விதமாகக் காட்டியிருக்கிறார். அவர் ஒளியிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்த தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம் (1 யோவான் 1:7). கிறிஸ்துவின் உபதேசம் ஐக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கிறது. உண்மையில், அவருடைய உபதேசமில்லாமல், ஐக்கியம் என்பதே இல்லை.

எனவே "உமக்குப் பயந்து, உமது கட்டளைகளைக் கைக் கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன், என்று சொல்லத்தக்கதான வகையில் நாம் அனை வரும் வாழ வேண்டும்" (சங். 119 : 63). ⁕



# ஆராதனை என்பது...

**Bro. *Ron Bryant***

ஆராதனை என்பது ஓர் உயர்வைத் தேடுவதல்ல; அது உயர் வானதுதான். அது தாழ்மையாயிருக்கத் தேடுவதல்ல; அது தாழ்மையாக இருப்பது தான். அது தேவனைப் போற்றத் தேடுவதல்ல; அது போற்றுதல் தான். அதுபோல, ஆராதனை என்பது துதிக்கத் தேடுவதல்ல அது துதிப்பது தான்.

ஆராதனை என்பது தேவனைத் தேடி கண்டுகொள்வதாகும். ஆராதனை என்பது முழங்காற்படி யிட்டு, உயரப் பார்ப்பதாயிருக்கிறது. ஆராதனை என்பது இருதயத்தை ஊற்றுவதாகவும், அதே நேரத்தில், நிரப்பப்படுவதாகவும் இருக்கிறது. அது தேவனுக்குள் களிகூருவது, தேவனை கனப்படுத்துவது, தேவனைத் துதிப்பது, தேவனைப் போற்றுவது போன்றவைகளாயிருக்கிறது. ஆராதனை என்பது மனிதனை மையப்படுத்துகிறதாயிராமல் தேவனை மையப் படுத்துகிறதாயிருக்க வேண்டும். அது கிறிஸ்தவர்களாக நாம் இருப்பதால் நமக்குக் கிடைக்கும் சிலாக்கியமாக இருக்கிறது, அது கிறிஸ்தவர்களுடைய கடமையாகவும் இருக்கிறது.

ஆராதனை என்பது வாழ்க்கையோடு பின்னிப் பிணையப்பட்டிருக் கிறது. எனவே, ஒரு கிறிஸ்தவனால் இரண்டையும் ஒன்றாக எண்ணிப் பார்க்க முடியும். வாழ்க்கையில் தேவனைக் கனப்படுத்த ஊக்கமான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். ஆராதனை வாழ்க்கையிலிருந்து ஒருபோதும் பிரியாத ஒன்றாக இருந்து, வாழ்க்கையின் மையமாக இருக்கிறது. பரிசுத்த அழகுடனே நாம் தேவனை ஆராதிக்க வேண்டும். மரியாதை தேவனுக்கு மாத்திரம் செலுத்தப்பட வேண்டும்.

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் ஆராதனை என்பது முக்கியப் பங்கு வகிக்கிறது. அது உயர்வானதும், பரிசுத்தமானதுமாயிருக்கிறது. இவை எல்லாவற்றிலும் ஒரு விசுவாசி தன்னுடைய வாழ்க்கை முழுவதும் தேவனையும், அவருடைய மகிமையையும் தேடுகிறார். இவைகள் எல்லாவற்றிலும் தேவனுடைய அன்பு, இரக்கம் கிருபை போன்றவைகள் தான் நம்மைக் கட்டுப்படுத்துகிறது.

ஆராதனை என்பது, மனிதனில் அன்பு கொண்டு, அவனுக்காகக் கிறிஸ்துவை மரிக்கக் கொடுத்து, அவனை ஏற்றுக் கொண்ட தேவனுக்கு மனிதன் பிரதிபலனாகச் செலுத்தும் ஒன்றாக உள்ளது. ✻

# ஞானஸ்நானம் எதற்காக ?

**Bro. *Ken Tyler***

" ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த ஞானஸ்நானம் அவன் இரட்சிக்கப்படுவதற்காக அல்ல. "....நாம் முன்பாகவே ஞானஸ்நானம் இல்லாமலேயே இரட்சிக்கப்பட்டிருக் கிறோம்..." பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் அல்ல போன்ற வாக்கியங் களெல்லாம் முற்றிலும் கத்தோலிக்கத்தன மானது.

மேலே குறிப்பிடப்பட்ட உபதேசங்களெல்லாம் சரிதானா? இந்த உபதேசங்களுக்குப் பின் அறிவாளிகள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பாவங்களை நீக்கிப் போடு வதற்கும், ஞானஸ்நானத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று நம்பு கிறார்கள். வேதாகமம் என்ன போதிக்கிறது? இந்தக் கட்டுரையில் ஞானஸ் நானத்தைப் பற்றி இயேசுவும், பேதுருவும், அனனியாவும் என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்று பார்ப்போம். அதன்பின்பு ஞானஸ்நானத்தின் நோக்கம் என்ன என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

முதலாவதாக, ஒருவர் ஞானஸ்நானத்திற்கு முன்பாக இரட்சிக்கப்படு கிறதில்லை என்று இயேசு சொன்னார். மாற்கு 16:16 யை கவனியுங்கள் " விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் ". இங்கே இயேசு " விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப்பட்டு அதன் பின்பு ஞானஸ்நானம் பெறுகிறான் " என்று சொல்லவில்லை. இயேசு வெளிப்படையாகவே " விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் " என்று சொல்லிவிட்டார். நான் இயேசுவின் வார்த்தைகளை கவனிப்பேன் என்று நம்புகிறேன். நீங்கள் எப்படி?

இரண்டாவதாக, " பாவமன்னிப்புக்கென்று நாம் ஞானஸ்நானம் பெற வேண்டும். அந்த ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது என்று சொன்னார் (அப். 2:38; 1 பேதுரு 3:21) வசனங்களை கவனியுங்கள், " .... நீங்கள் மனந் திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்; அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக் கிறது. இவ்விரு வசனங்களை வைத்துப்பார்க்கும்போது, ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கானதல்ல, அந்த ஞானஸ்நானம் நம்மை இரட்சிப்பதில்லை என்று ஒருவரால் எப்படிச் சொல்ல முடியும்? இருந்தபோதிலும், நாம் ஆரம்பத்தில் பார்த்தபடி " ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த ஞானஸ்நானம் அவன்

இரட்சிக்கப்படுவதற்காக அல்ல. ஏனென்றால், அவன் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டான் " என்று சொல்லுகிறதை என்னவென்று சொல்லுவது? நான் பேதுருவை நம்புகிறேன், நீங்கள் எப்படி?

மூன்றாவதாக, அனனியா நம் " பாவங்கள் கழுவப்படும்படி " நாம் ஞானஸ் நானம் பெற வேண்டும் என்று சொன்னார். அவர் தர்சு பட்டணத்தாகிய சவுலிடம் " இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றான். இங்கே, நான் அனனியாவை கவனிப்பேன். நீங்கள் எப்படி?

ரோமர் 6:3,7 வசனங்களில் பவுல் நாம் கிறிஸ்துவின் மரணத்திற் குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, அவரோடு கூட அடக்கம் பண்ணப்பட்டு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு எழுந்தருந்தோம் என்று தெளிவுபடுத்திவிட்டார். அவருடைய மரணத்தில் கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார். நம் பாவங்கள் நீக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக எழுந்திருக்கிறோம். இது மிகவும் சுலபமானது! ஞானஸ்நானம் எதற்காக என்று வேதாகமம் சொல்கிறதை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது? நீங்களோ, நானோ அல்லது வேறுயாரோ பரலோகம் போவதற்கு ஒரே வழி இதுதான். ✳

## சிலுவை நமக்கு இரட்சிப்பை சாத்தியமாக்கியிருந்தாலும் கூட மனிதன் அறிந்த மிக ஆச்சரியமான கருத்துக்களை அது வழங்குகிறது

அது வரலாற்றில் மிகவும் பரிதாபகரமான சம்பவம்...

*ஆனாலும் நடந்த எல்லாவற்றிலும் மிகவும் அற்புதமான காரியம்.*

அது மனித இனம் கண்ட சோகமான காட்சி...

*ஆனாலும் அதன் மூலம் மிகப்பெரிய மகிழ்ச்சி வந்தது.*

அந்த கரடுமுரடான சிலுவை சாத்தானின் மிகப்பெரிய வெற்றி...

*ஆனாலும் அந்த சிலுவையால் சாத்தான் அதிர்ச்சியூட்டும் தோல்வியைத் தழுவினான்.*

சிலுவை தெய்வீக நீதியின் மிகப்பெரிய வெளிப்பாடாய் இருக்கிறது...

*ஆனாலும் அது தெய்வீக இரக்கத்தின் அற்புதமான நிரூபணமாயிருக்கிறது.*

அந்த சிலுவை மூலமாகத்தான் தேவன் பாவத்தை கண்டனம் பண்ணினார்...

*ஆனாலும் அதன் மூலமாகத்தான் அவர் பாவியை மன்னித்தார்.*

சிலுவை தேவனுக்கு பாவத்தின் மீதிருக்கும் பகையை அடையாளப்படுத்துகிறது....

*ஆனாலும் பாவிக்கு அது அவருடைய அன்பின் மிகப்பெரிய நிரூபணமாயிக்கிறது.*

சிலுவை மனித இனத்தின் இருளான வேளையாக இருந்தது...

*ஆனாலும் எல்லா வெளிச்சத்திலும் அது மிகப்பெரியதாயிருந்தது.*

அந்த நாளில் சூரியன் நடுப்பகலில் பிரகாசிக்க மறுத்தது...

*ஆனால் அந்த நாளில் குமாரன் இவ்வுலகின் ஒளியானார்.*

# பாடம்-37. காணிக்கைப் பணத்தை எப்படிக் கையாளுவது?

**Bro. K. பாஸ்கர்**

அன்பான வாசகர்களே, ஆண்டவர் இயேசுவின் புண்ணிய நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று அநேக சபைகளில் காணிக்கைப் பணத்தை கையாளுவது பற்றித் தெரியாமல் பணத்தை தங்களின் தலைமையிடத்திற்கு அனுப்பி விடுவதைப் பார்க்கலாம். சிலர் வங்கியிலே சேர்த்து வைத்து மொத்த தொகை சேர்ந்தவுடன் அதை எடுத்து அதற்குரிய பொறுப்பாளர் தலைமறைவாகி விடுவதையும் பார்க்கலாம். இன்னும் சில சபைகளில் காணிக்கைப் பணத்தைக் கையாளுவது பற்றி தெரியாமல் புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு செலவிடுவதைப் பார்க்கலாம். உலகப் பிரகாரமான காரியங்களுக்காகத்தான் வாரத்தின் முதல் நாளில் காணிக்கைப் பணம் சேர்த்து வைக்கப்படுகிறதா? காணிக்கைப் பணத்தை எப்படி கையாளுவது என்பது பற்றி வேத வசனம் என்ன கூறுகின்றது என்று இந்த மாதத்தில் பார்ப்போமாக.

## I. காணிக்கை என்றால் என்ன?

காணிக்கை பற்றி அநேகரிடத்தில் தெளிவு இல்லை. எனவே தான், கொடுக்கப்பட்ட காணிக்கையைக் குறித்துசண்டை போடுவதும், வழக்குப் போடுவதும் நடக்கிறது. இப்படிப்பட்ட செயல்கள்யாவும் மாம்சத்துக்குரியவைகள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் (1 கொரி. 3:1,3). காணிக்கை பற்றி தெளிவு வரவேண்டும் என்றால் முதலில் காணிக்கை என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

காணிக்கை என்பது தன்னையே அர்ப்பணித்துக் கொடுப்பது. கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்தார் என்று வேத வாக்கியம் சொல்லுகின்றது. (எபே. 5:2) முதல் நூற்றாண்டில் விசுவாசிகள் எல்லாரும் தன்னைத்தானே தேவனுக்கு ஒப்புக்கொடுத்தபடியால் தங்களிடத்தில் இருக்கும் சொத்துக்களை அற்பமாக எண்ணியதால் நிலங்களையும், வீடுகளையும் விற்று விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். ஒருவனும் இதைக் குறித்து கணக்கோ, வழக்கோ ஒன்றும் பேசவில்லை. அப்போஸ்தலர்கள் அதைப் பொதுவாய் வைத்து செயல்பட்டனர். காணிக்கைப் பண விசயத்தில் ஒரே இருதயமும், ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். இப்படிப்பட்ட எண்ணம் இன்று நமக்கு இருக்க வேண்டும் (அப். 4:32,35). தன்னையே அர்ப்பணித்துக் கொடுக்கும் காணிக்கையைக் குறித்து கணக்கு கேட்கவோ, சண்டையிடவோ முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையாரிடத்தில் இல்லை. நாமும் இதைப் பின்பற்றுவோம்.

காணிக்கைப் பணம் என்பது பரிசுத்தவான்களுக்கு சேர்க்கப்படும் தர்மப்பணம் (1 கொரி. 16:1,2) தர்மமாய்க் கொடுக்கும் பணத்தைக் குறித்து ஏன் கவலைப்பட வேண்டும்? ஏன் பிரச்சனை செய்ய வேண்டும்? ஏன் பிரிந்து

செல்ல வேண்டும்? வேதபாரகர், பரிசேயர் காணிக்கையிலே மட்டும் குறியாக இருந்தார்கள். அவர்களை ஆண்டவர் இயேசு கிறிஸ்து மாயக்காரரே உங்களுக்கு ஐயோ! என்கிறார். பரிசுத்த வாழ்க்கைதான் முக்கியமா அல்லது காணிக்கை முக்கியமா? என்று கடிந்து கொள்ளுகிறார் (மத். 23:19). காணிக்கைப் பற்றிய சர்ச்சை அநேக சபைகளில் காணப்படுகிறது. முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையில் இந்த சர்ச்சை இல்லை. தெளிவாக இருந்தனர். அது போல நாமும் தெளிவாக இருப்போம். இது பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப் படும் தர்மப் பணம் என்ற தெளிவுடன் இருப்போம்.

## II. காணிக்கைப் பணத்தைக் கையாளுவது பற்றி வேதம் என்ன கூறுகின்றது?

வாரத்தின் முதல் நாளில் ஆராதனையின் போது கொடுக்கப்படும் காணிக்கைப் பணத்தை அநேக சபைகளில் தங்களின் தலைமையிடங் களுக்கு அனுப்புவதை நாம் பார்க்க முடியும். ஆனால், பரிசுத்த வேதாகமத்தில் தலைமையிடத்தைக் குறித்து ஒன்றும் சொல்லப்படவே இல்லை. ஏனெனில், இயேசு கிறிஸ்துவே சபைக்கு தலைவராயிருக்கிறார் என்றும் அவர் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்து பரலோகத்தில் இருக்கிறார் என்றும் அதிகாரங்களும், வல்லமைகளும் அவரிடத்தில் மட்டுமே இருப்பதாக வேதம் கூறுகின்றது (1 பேதுரு 3:22) எனவே, பூமியிலே மனிதர்கள் தலைவர்களாகவோ, தலைமையிடமாகவோ கிறிஸ்துவின் சபைக்கு இல்லை. ஆகவே, வசனத்தின்படி இயங்கும் கிறிஸ்துவின் சபையானது காணிக்கைப் பணத்தை எங்கும் அனுப்புவது இல்லை. காணிக்கைப் பணத்தைக் கையாளுவது குறித்து பரிசுத்த வேதம் என்ன கூறுகின்றது?

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளை நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்பதே! (மாற்கு 16:15) கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங் கிக்க ஊழியர்களை அனுப்ப வேண்டும் (ரோமர் 10:15). அதற்கென்றே வாரத்தின் முதல் நாளிலே காணிக்கைப் பணம் சேகரிக்கப்படுகிறது. நன்றாய் ஊழியம் செய்யும் ஊழியர்கள் இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக இருக் கின்றார்கள் (1 தீமோ. 5:17) போரடிக்கிற மாட்டை வாய்கட்டாயாக என்றும், சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்கள் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகும் படி கர்த்தரும் கட்டளையிட்டிருக்கின்றனர். (1 கொரி. 9:7,14). ஆகவே, காணிக்கைப் பணத்தை வைத்துக் கொண்டு ஊழியர்களை அதிகாரம் பண்ண யாருக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. கிறிஸ்து ஒருவருக்கே சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். 28:18). அவரே ஊழியர்களை கனம் பண்ணு கிறார். பிதாவானவர் கனம் பண்ணுகிறார் (யோவான் 12:26). ஆகவே, காணிக்கைப் பணம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், திக்கற்ற பிள்ளைகள், விதவைகள் இவர்களுக்கு சபையின் காணிக்கையிலிருந்து உதவி செய்யவும் பயன்படுத்தப்பட வேண்டும் (1 தீமோ. 5:16; யாக். 1:27) அடுத்து, சபையின் பக்தி விருத்திக்காக காணிக்கைப் பணம் செலவழிக்கப்படலாம் (எபே. 4:12).

## III. காணிக்கைப் பணத்தினால் வரும் ஆசீர்வாதமும், சாபமும்

காணிக்கைப் பணத்தை ஆவிக்குரிய தேவைகளுக்குக் கையாளும் போது அதனால் மிருந்த மகிழ்ச்சி உண்டாகின்றது. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அந்த மகிழ்ச்சியைக் கொண்டாடினார்கள் (அப். 2:44,47).

பிலிப்பு நாட்டு சபை மக்கள் கணக்குப் பார்க்காமல் ஊழியத்திற்குக் கொடுத்ததினால் பரலோகத்திலே அவர்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படி ஆசீர்வாதம் இருந்தது (பிலி. 4:17) அதே சமயத்தில் காணிக்கை விசயத்தில் பொய் சொன்ன அனனியா, சப்பீராள் கணவன், மனைவி கர்த்தருடைய சாபத்தைப் பெற்றுக்கொண்டு மரித்தனர். ஏன் அவர்கள் பொய் சொன்னார்கள்! ஏன் சாபத்தைப் பெற்றுக் கொண்டார்கள்? அவர்கள் கர்த்தருடைய சமூகத்தில் கொடுத்த பணத்தை கர்த்தருடையது என்று நினைக்காமல் தன்னுடையதாகவே நினைத்தபடியால் அவர்கள் சாபத்தைப் பெற்று உடனே மரணமடைந்தனர். (அப். 5:1-10) நானும் ஊழியத்திற்கென்று கொடுத்த பணத்தை தன்னுடையது என்று நினைத்து செயல்பட்டால் சாபத்தைத்தான் பெற்றுக் கொள்வோம்.


எனவே, நாம் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போல எல்லாம் கர்த்தருடையது என்று எண்ணுவோம் (அப். 4:32). ஊழியத்திற்காக கணக்கு வழக்குப் பார்க்காமல் வாரியிறைப்போம். பரலோகில் திரளான ஆசீர்வாதங்களுக்கு சுதந்திரவாளிகளாயிருப்போம் (2 கொரி. 9:9). ✻


(தொடரும்)


## ஏன் இப்படித் தீர்மானிக்கக் கூடாது? புதிய ஆண்டில்.....

1. காலை எழுந்தவுடன் வேதம் கட்டாயம் வாசிப்பேன் என்று
2. குறைந்தபட்சம் காலை, இரவு இரண்டு நேரமும் ஜெபிக்காமல் இருக்கமாட்டேன் என்று.
3. வாரம் தவறாமல் தொழுகைக்குச் செல்வேன் என்று
4. குறைந்தது மாதம் ஒரு ஆத்துமாவுக்காகிலும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பேன் என்று
5. என்ன நேர்ந்தாலும் கிறிஸ்துவை நோக்கியே என் பக்திப் பயணத்தை நடத்துவேன் என்று
6. கர்த்தர் கொடுத்த பெலத்தின்படி எல்லாவகையிலும் ஊழியக் காரியங்களுக்கு ஆதரவாய் இருப்பேன் என்று
7. எப்படிப்பட்ட சோதனை வந்தாலும் கிறிஸ்துவை விட்டு விலகமாட்டேன் என்று


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.















**World Evangelism Gospel Media**



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 am
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:


TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)


## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:


TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


# எங்களது இதர வெளியீடுகள்


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014












சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

# திருமறை தியானம்

## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.